البديعة
badeea

# இணைவைப்பிற்க்கு துணை நிற்ப்பவை



وسائل الشرك
اللغة التاميلية

# இணைக்கு
# இவைதான் துணைகள்.

மூலம்
இப்றாஹீம் அல் புரைகான்.

தமிழில்
முஹம்மத் உனைஸ்

மேற்பார்வை
அப்துல் அஸீஸ் ஷாஜஹான்

ⓒ المكتب التعاوني للدعوة والإرشاد بالشفا ، ١٤٢٤ هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

البريكان، ابراهيم بن محمد
وسائل الشرك./ ابراهيم بن محمد البريكان؛ محمد انيس صلاح الدين
.- الرياض، ١٤٢٤ هـ
٦٤ ص، ١٢×١٧ سم
ردمك: ٢ - ٦٠ - ٨٤٣ - ٩٩٦٠
(النص باللغة التاميلية)
١ - الشرك بالله أ. صلاح الدين، محمد انيس (مترجم) ب. العنوان
ديوي ٢٤٠ ١٤٢٤/٨٧

رقم الإيداع : ١٤٢٤/٨٧
ردمك : ٢ - ٦٠ - ٨٤٣ - ٩٩٦٠

بسم الله الرحمن الرحيم

**முன்னுரை.**

எல்லாப்புகழும் வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும். அவன் தனித்தவன் இணைதுணை அற்றவன். வணக்கத்துக்குரிய நாயன் அவனைத் தவிர வேறுயாருமில்லை என சாட்சி கூறுகின்றேன். சாந்தியும் கருணையும், உலகத்துக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள், அவர்களை இறுதிநாள் வரை பின்பற்றி நடப்பவர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

அன்பார்ந்த சகோதரர்களே!

இன்று முஸ்லிம் என்ற பெயரில் வாழ்ந்து கொண்டிருப்போரில் அதிகமானோர் தெரிந்தோ, தெரியாமலோ சில ஷிர்க்குகளில் ஈடுபட்டு அவைகளிலிருந்து எப்படி தம்மைப் பாதுகாத்துக் கொள்வதெனத் தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள். அவைகளில் ஒன்றான அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதையும், அதற்கு எவையெல்லாம் துணை போகின்றனவென்பதையும் இச்சிற்றேட்டிலே தெளிவாகவும், மிகவும் சுருக்கமாகவும் குறிப்பிட விரும்புகின்றேன்.

எனவே நாமனைவரும் இதிலுள்ளவைகளைப் படித்து பயன் பெறுவதுடன், நாம் செய்து கொண்டிருக்கும் இணைகளையும், அவைகளுக்கு துணை போபவைகளையும் தவிர்ந்து நடக்க எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

ஆசிரியர்.

**துணை.**

நாம் உறுதுணை என்ற வார்த்தையை பொதுவாகக் கூறும்போது அது மற்றொன்றுக்கு உதவியாய் இருப்பதையே குறிக்கின்றது. அதனால்தான் ஹராத்தைச் செய்வதற்கு துணை யாய் இருப்பவைகளை ஹராமெனவும், கடமைகளையும், சுன்னத்துக்களையும் செய்வதற்கு துணையாயிருப்பவைகளை கடமையெனவும் சுன்னத்தெனவும், வெறுக்கப்பட்டவைகளை செய்வதற்கு துணையாயிருப்பவைகளை வெறுக்கப்பட்டவை எனவும் இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கின்றது.

மேற்கூறப்பட்ட முறையில் பார்க்கையில் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதற்கு துணையாய் இருப்பதற்கெல்லாம் இணை கற்பிப்பதற்கு என்ன சட்டமோ அதே சட்டம்தான் வழங்கப் படுகின்றதென்பது தெளிவாகின்றது. மேலும் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதற்கு உதவியாயிருக்கும் அவைகள்தாம் பெரும் பாவங்களாகவும் கருதப் படுகின்றன.

எனவே அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதின்பால் இட்டுச் செல்லும் வழிமுறைகள் நம்மத்தியில் மலிந்து காணப்படுவதால் அவ்வழிமுறைகளையும், அவைகளுக்கு இஸ்லாம் கூறும் சட்டங்களையும் அறிந்து கொள்வது நம்மீது கட்டாயக் கடமையாகின்றது. அதனடிப்படையில் அவைகளில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற பித்அத்தான வஸீலாவைப்பற்றி முதலில் பார்ப்போம்.

**பரிந்துரை (வஸீலா).**

வஸீலா எனும் அறபுப் பதம் ஒரு அடியானை பரிந்துரையின் மூலம் அல்லாஹ்விடம் நெருக்கமாக்கி வைப்பதனையே குறிக்கின்றது. அதனைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறிக் கொண்டிருக்கின்றான். அவர்கள் தங்கள் இரட்சகனின்பால் (நற்செயல்கள் செய்வது கொண்டு) அவர்களில் யார் மிக்க நெருக்கமானவர்கள் என்று நெருக்கத்தைத் தேடுகின்றார்கள்

(17.57). நாம் மேலே கூறிய வஸீலாவை இரு வகைப்படுத்த லாம். அவைகள்:

1. அல்லாஹ்வினால் விரும்பப்படக்கூடிய சொல், செயல், நம்பிக்கை போன்ற நற்கிரியைகள் மூலம் அவனிடம் நெருக்கமாக்கி வைப்பதை எதிர்பார்க்கப்படும் இஸ்லாத்தினால் ஆகுமாக்கப்பட்ட வஸீலா.
2. அல்லாஹ் வெறுக்கக்கூடிய சொல், செயல், நம்பிக்கை போன்றவை மூலம் அவனிடம் நெருக்கமாக்கி வைப்பதை எதிர்பார்க்கப்படும் இஸ்லாத்தினால் விலக்கப்பட்ட வஸீலா. இவ்வகை வஸீலாதான் இன்று நமக்கு மத்தியில் நாம் செய்யும் வணக்கமான பிரார்த்தனையுடன் சம்பந் தப்பட்டிருப்பதைக் காணலாம்.

மேற்கூறப்பட்ட இஸ்லாம் வெறுக்கக்கூடிய இரண்டாவது வஸீலாவைப் பொறுத்தவரையில் அதனைப் பல வகையாகப் பிரிக்கலாம். அவைகள் பின்வருமாறு:

1. மரணித்து கப்றுகளில் அடக்கம் செய்யப்பட்டவர்களிடம் பிரார்த்தித்து பாதுகாப்புத்தேடி அதன் மூலம் அல்லாஹ்வை நெருங்க முற்படுவதாகும். இவ்வாறாக ஒருவன் ஈடுபட்டு அதன்மூலம் அவன் அல்லாஹ்வை நெருங்கநாடினால், அவனது அக்கிரியையின் மூலம் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தான் என்ற குற்றத்துக்கு ஆளாகின்றான். அத்துடன் அவன் இஸ்லாத்திலிருந்து வெளியேறியவனாகவும் கருதப் படுகின்றான்.
2. வலிமார்களென்றும் பெரியார்களென்றும், நாதாக்களென்றும் கூறப்பட்டுக் கொண்டிருப்பவர்களுடைய கப்றுகளை நிர்மாணித்தல், திரையிடல், மெழுகுவர்த்தி பற்ற வைத்தல், வெள்ளையடித்தல் போன்றவைகளை வணக்கங்களாகக் கருதி அவைகளைச் செய்து வருதல். அத்துடன், அக்கப்றடிகளிலிருந்தவாறு அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்ய வேண்டிய வணக்கங்களான பிரார்த்தனை, நேர்ச்சை போன்ற இதர வணக்கங்களையும் அக்கப்றுகளில் அடக்கப்பட்டி

ருப்பவர்களுக்கு செய்து வருவதைக் குறிப்பிடலாம். இவ்வாறாக ஒருவன் செய்து வரும்போது அவன் இஸ்லாம் வெறுக்கக் கூடிய சிறிய இணையைச் செய்தவனாகக் கருதப்படுகின்றான். அத்துடன் அவனது உள்ளத்திலிருக்கும் (தவ்ஹீத்) ஏகத்துவக் கொள்கையின் பூரணத்தன்மையையும் இழந்தவனாகக் கருதப்படுகின்றான்.

3. இறைநேசர்களுக்கு அல்லாஹ்விடம் என்ன கண்ணியம், மதிப்பு இருக்கின்றதோ அவைகளை அவனிடம் முன்வைத்து, அதன்மூலம் தனது பிரார்த்தனைக்கு விடையளிக்குமாறு அவனிடம் பிரார்த்தித்தல். இவ்வாறாக பிரார்த்தனையில் ஈடுபடுவது இஸ்லாம் தடுத்தவைகளிலுள்ளதாகும். ஏனெனில் அந்த இறைநேசர்களுக்கு அல்லாஹ்விடமிருக்கும் கண்ணியமும், மதிப்பும் எப்போதும் அவர்களுக்கு மாத்திரம்தான் பிரயோஜனமளிக்குமே தவிர அதன் மூலம் வேறு எவருக்கும் பிரயோஜனம் அடைய முடியாது. அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் மனிதனுக்கு அவன் முயற்சித்தது (சம்பாதித்தது) தவிர வேறில்லை (53.39). மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், மனிதன் மரணித்து விட்டால் அவனது மூன்று விஷயங்களைத் தவிர ஏனைய அனைத்தும் அவனை விட்டும் துண்டிக்கப்பட்டு விடுகின்றன. அவைகள்: அவனுக்காக செய்யப்பட்ட (சதகா ஜாரியா) நிலையான தர்மம், அவன் கற்றுக் கொடுத்து விட்டுச் சென்ற பிரயோஜனமளிக்கக் கூடிய அறிவு, தனக்காக பிரார்த்திக்கும் சாலிஹான குழந்தை போன்றனவாகும் எனக் கூறுகின்றார்கள்.

இறைநேசர்களுக்கு அல்லாஹ்விடமிருக்கும் கண்ணியம், மதிப்பு போன்றவைகள் அவர்களுக்கு மாத்திரந்தான் உபயோகமாகுமே தவிர, வேறு எவருக்கும் பிரயோஜனம் அடைய முடியாது என்பது மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனத்தின் மூலமும், நபிமொழி மூலமும் தெளிவாகின்றது. ஆக அல்லாஹ் ஒரு அடியானை விரும்பி விட்டானென்

றால் அந்த அடியானை அவனிடத்தில் நெருக்கமாக்கி வைப்பதற்கு யாருடைய சிபாரிசும் அவசியமாக மாட்டாது. அதேபோன்று அவன் ஒருவனை கோபித்து விட்டானென்றால் கோபிக்கப்பட்டவனுக்காக அவனிடம் வேண்டப்படும் எவருடைய சிபாரிசும் செல்லுபடியாகவும் மாட்டாது.

மேற்கூறப்பட்டவாறு சிபாரிசு செய்வதும், அதனை ஏற்றுக் கொள்வதும் அல்லாஹ்வின் படைப்புகளான மனிதர்களிடம்தான் செல்லுபடியாகின்றன. அவ்வாறு மனிதர்களிடம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அவைகள் உலக சம்பந்தப்பட்டவைகளாகத்தான் இருக்குமே தவிர மறுமை சம்பந்தப்பட்டவைகள் அவர்களிடம் செல்லுபடியாக மாட்டாது என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதனால் தான் நபி (ஸல்) அவர்களது மரணத்தின்பின் சிலகாலங்கள் கழித்து மழையின்றி வறட்சி ஏற்பட்டது. அப்போது மரணித்து கப்றிலே அடக்கப்பட்ட நபி (ஸல்) அவர்களைக் கொண்டு சிபாரிசு தேடாமல் உயிரோடிருக்கும் நபியவர்களது சிறிய தந்தையான அப்பாஸ் (ரலி) அவர்களிடமே பிரார்த்திக்குமாறு நபித்தோழர்கள் வேண்டினார்கள். இன்று நாம் நினைப்பது போன்று மரணித்தவர்களிடம் சிபாரிசு வேண்டலாம் என்றிருந்தால் மிகவும் கண்ணியத்துக்கும், சிறப்புக்குமுரியவரான முஹம்மத்(ஸல்)அவர்களிடமே அந் நபித்தோழர்கள் சிபாரிசு செய்யுமாறு வேண்டியிருப்பார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு மிகவும் சிறப்புக்குரியவராக இருந்த போதிலும் அவர்கள் மரணித்து விட்டார்கள், அவர்களிடம் சிபாரிசு செய்யுமாறு வேண்டுவதில் எவ்விதப் பயனும் இல்லை, நபி (ஸல்) அவர்களும் அவ்வாறான ஒரு வணக்கத்தை நமக்குக் கற்றுத்தர வில்லை, அவ்வாறு அவர்களிடம் நாம் சிபாரிசு செய்யுமாறு வேண்டினால் இஸ்லாத்தில் இல்லாத ஒன்றை புதிதாக நாம் ஏற்படுத்தி விட்டோம் என்ற குற்றத்துக்காக அல்லாஹ்வின் தண்டனைக்குத்தான் ஆளாகுவோம் என்பவைகளை அறிந்

திருந்த நபித்தோழர்கள் அவர்களிடம் சிபாரிசு செய்வதைத் தவிர்த்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட சிறப்புக்குரியவரிடமே அந்நபித்தோழர்கள் சிபாரிசு செய்யுமாறு வேண்டாதபோது அது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாத ஒன்று என்பது தெளிவாகின்றது.

அல்லாஹ்விடம் தம்மை நெருக்கமாக்கி வைப்பதற்காக அவனுடைய படைப்பினங்களைக் கொண்டு சிபாரிசு வேண்டலாம் என யாரெல்லாம் கூறுகின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வையும், அவனால் படைக்கப்பட்ட சாதாரண படைப்புகளையும் ஒரே தரத்தில் வைத்து கணித்து விட்டவர்களாகும். ஒருமுறை ஒரு குருடர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் உங்களைக் கொண்டு அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யப் போகின்றேன் எனக்கூறப்பட்டு வந்திருக்கும் ஹதீஸைப் பொறுத்த வரையில், அம்மனிதர் நபியவர்களிடம் தனக்காக பிரார்த்திக்குமாறுதான் வேண்டினார்களே தவிர, நபியவர்களின் பொருட்டைக் கொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வில்லை என்பதை சஹீஹான பல நபிமொழிகள் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

அதனடிப்படையில்தான் நபி (ஸல்) அவர்கள் அம்மனிதரிடம் (அல்லாஹும்ம ஷப்பிஃஹு பிய்ய) இறைவா! நபியவர்களை எனக்காக சிபாரிசு செய்ய வைப்பாயாக! என அவரது பிரார்த்தனையில் சேர்த்து பிரார்த்திக்கும்படி கூறினார்கள். ஆனால் இந்த ஹதீஸில் மேற்கூறப்பட்டுள்ளவாறு வந்திருந்தாலும், இந்த ஹதீஸ் சஹீஹான ஹதீஸ்தான். அதனை நடைமுறைப்படுத்தலாம் என்ற அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போதுதான் அதனை ஏற்றுக்கொள்ள முடிகின்றது. என்றாலும் இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர் வரிசையில் தொடர் அறிவிப்பு இல்லாமல் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதால் அதனை நடை முறைப்படுத்துவதற்கு தகுந்த ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாமா? முடி

யாதா? என்ற விஷயத்தில் மார்க்க அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இருந்து கொண்டிருக்கின்றது.

மேலும் எனது கண்ணியம் அல்லாஹ்விடம் மகத்துவ மிக்கதாகும். எனவே எனது கண்ணியத்தைக் கொண்டு நீங்கள் அவனிடம் பிரார்த்தியுங்கள் எனக்கூறப்பட்டு வந்திருக்கும் ஹதீஸைப் பொறுத்த வரையில், அந்த ஹதீஸ் ஹதீஸெனக் கூறப்பட்டாலும் நபி (ஸல்) அவர்கள் கூறாமல் அவர்கள் கூறியதாக அவர்கள்மீது இட்டுக்கட்டப்பட்ட (மவ்ழூஆன) ஹதீஸாகும் என்பதனை ஹதீஸ் கலையில் தேர்ச்சிபெற்ற அறிஞர்கள் ஒருமித்த கருத்தாகக் கூறியிருக்கின்றார்கள்.

4. இறைவா! முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொண்டு உன்னிடம் பிரார்த்திக்கின்றேன் எனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களைக் கொண்டு பிரார்த்திக்கின்றேன் எனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! எனப் பிரார்த்திப்பதைப் போன்று இறைநேசர்களைக் கொண்டு பிரார்த்தித்தல். இவ்வாறாக பிரார்த்திப்பது இஸ்லாத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக இருப்பதுடன், இஸ்லாம் தடுத்து ஹராமாக்கியவைகளிலும் உள்ளதாகும். மேலும் நாம் மேற்கூறப்பட்டவாறு பிரார்த்திக்கும்போது, அது பல கருத்துக்களைக் கொடுக்கின்றது. அதுமட்டுமின்றி அக்கருத்துக்கள் அனைத்தும் மார்க்கம் அனுமதிக்காதவைகளுமாகும். அவ்வாறு அவ்வார்த்தை கொடுக்கக்கூடிய சில கருத்துக்களையும் நீங்கள் அறிந்து தவிர்ந்து கொள்வதற்காக உங்கள் முன் வைக்கின்றோம்.

- இறைநேசர்களின் கண்ணியத்தைக் கொண்டு பிரார்த்தித்தல்.
- வலிமார்கள், பெரியார்கள், நாதாக்கள் போன்றோரைக் கொண்டு சத்தியம் செய்து அதன்மூலம் பிரார்த்தித்தல். இவ்வாறு அல்லாஹ்வின் படைப்பினங்களைக் கொண்டு

சத்தியம் செய்து பிரார்த்திப்பது சிறிய இணையைச் சார்ந் ததாகும்.

- நன்மையை வரவழைக்கவும், தீமையைத் தடுக்கவும் அல்லாஹ்வுக்கும் தனக்குமிடையில் சிபாரிசு செய்யக் கூடிய ஒருவரை நியமித்தல். இவ்வாறு செய்வது அன்றைய அறியாமைக்கால மக்கள் செய்து வந்த இணையாக இருப் பதுடன், அதனைச் செய்பவன் இஸ்லாத்தை விட்டு நீங் கியவனாகவும் கருதப்படுகின்றான். அன்றைய முஷ்ரிகீன்கள் எந்த நோக்குடன் அவர்களிடமிருந்த சிலைகளை வணங் கினார்கள் என்பதைப்பற்றி அல்லாஹுதஆலா கூறுகையில் பின்வருமாறு கூறுகின்றான். எங்களை அவர்கள் நெருக்கத் தால் அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைப்பார்கள் என்பதற்காக வேயன்றி அவர்களை நாங்கள் வணங்கவில்லை (என்று கூறுகின்றனர்)(*39.3*).
- அவ்வார்த்தைகளை உபயோகிப்பதின் மூலம் பறகத் பெறு வதை நாடுதல். அவ்வாறு கேட்பதனாலும், மேற்கூறப்பட்ட கருத்துக்கள் உள்ளடக்கப் பட்டிருப்பதாலும், இஸ்லாம் அதனை அனுமதிக்காததாலும், நபித்தோழர்கள், மற்றும் தாபியீன்கள் அவ்வாறு செய்யாததாலும் அது தடுக்கப்பட்ட பித்அத்தாகும். நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், யாரா யினும் ஒருவன் எங்களது இம்மார்க்கத்தில் இல்லாத ஒரு விஷயத்தை உள்ள தெனக்கூறி செய்து வருகின்றானோ அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனக்கூறுகின்றார்கள். மேலும் கூறுகையில், மார்க்கத்தில் புதிதாக உருவாக் கப்பட்டவைகளை உங்களுக்கு எச்சரிக்கின்றேன். ஏனெனில் புதிதாக உருவாக்கப்பட்டவைகள் அனைத்தும் பித்அத் துக்களாகும். பித்அத்துக்களனைத்தும் வழிகேடுகளாகும் எனக் கூறுகின்றார்கள்.

எனவே தடுக்கப்பட்ட வஸீலாக்களின் வகைகளையும், அவைகளது சட்டங்களையும் அறிந்து கொண்டோம்.

அதேபோன்று ஆகுமாக்கப்பட்ட வஸீலாக்களின் வகைகளையும், அவைகளது சட்டங்களையும் அறிந்து கொள்வது நம்மீது அவசியமாகும். தடுக்கப்பட்ட வஸீலாக்கள் பல வகைகளாக இருப்பதுபோன்று ஆகுமாக்கப்பட்ட வஸீலாக்களையும் பல வகைப்படுத்தலாம்.

- நாம் பிரார்த்திக்கும்போது அல்லாஹ்வின் பெயர் பண்புகளை நமது பிரார்த்தனைகளில் இணைத்துப் பிரார்த்தித்தல். அதனைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். இன்னும் அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள்(7.180). எனவே பிரார்த்திக்கும் ஒருவன் அவனது பிரார்த்தனைக்கேற்ப அல்லாஹ்வின் பெயரை அங்கங்கே உபயோகித்துக் கொள்வது சிறந்ததாகும். உதாரணமாக அல்லாஹ்விடம் அருளைக் கேட்கும்போது அவனது பெயர்களில் ஒன்றான (ரஹ்மான்) அருள்பாலிக்கக் கூடியவன் என்ற பெயரையும், பிழை பொறுக்கத் தேடும்போது (கபூர்) பிழைபொறுப்பவன் என்ற பெயரையும் உபயோகிப்பதைப் போன்று வேறு எந்தத்தேவைகளை நாம் கேட்பதாயிருந்தாலும் அவைகளுக்கேற்றவாறு அவனது பெயர் பண்புகளை உபயோகித்துக் கொள்ள வேண்டும்.
- நாம் கொண்டிருக்கும் தவ்ஹீதையும், ஈமானையும் கொண்டு பிரார்த்தித்தல். அவைகளைக் கொண்டு எவ்வாறு பிரார்த்திக்க வேண்டும் என்பதைப்பற்றி அல்லாஹ்வே பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். எங்கள் இரட்சகனே! நீ (இவருக்கு) இறக்கி வைத்த (வேதத்)தை நாங்கள் விசுவாசிக்கின்றோம். (உன்னுடைய) இத்தூதரையும் நாங்கள் பின்பற்றி நடக்கின்றோம். ஆதலால் (சத்தியத்திற்கு) சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக! (என்றும் சீடர்கள் பிராத்தித்தனர்)(3.53).

எனவே இறைவா! நான் உன்மீது கொண்டிருக்கும் நம்பிக்கையின் மூலம் எனது தேவையை நிறைவேற்றித் தருவாயாக! நான் உன்னை விசுவாசித்திருக்கும் எனது விசுவாசத்தின் மூலம் எனது தேவைகளை நிறைவேற்றித் தருவாயாக! என பிரார்த்தித்துக் கொள்வதற்கு இஸ்லாம் நமக்கு அனுமதியளித்திருக்கின்றது.

- தொழுகை, நோன்பு, குர்ஆன் ஓதுதல் போன்ற நற்கிரியைகளைக் கொண்டு பிரார்த்தித்தல். அதாவது நாம் பிரார்த்திக்கும்போது இறைவா! நான் தொழுத இந்த தொழுகையின் மூலம் எனது பிரார்த்தனைக்கு விடையளிப்பாயாக! அல்லது நான் நோற்ற நோன்பின் மூலம் எனது பிரார்த்தனைக்கு விடையளிப்பாயாக! எனப்பிரார்த்திக்கலாம். இதே போன்று இதர வணக்கங்களையும் முன்வைத்து பிரார்த்திக்கலாம். அதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம். மூன்று மனிதர்கள் ஒருபாதை வழியாக சென்று கொண்டிருக்கையில் மழை பெய்ய ஆரம்பித்தது. மழையில் நனையாதிருப்பதற்காக பக்கத்திலிருந்த ஒரு குகையில் ஒதுங்கினார்கள். அப்போது எங்கிருந்தோ வந்த பாராங்கல்லொன்று அக்குகையின் வாயிலை அடைத்துக் கொண்டது. அதிலிருந்து வெளியேற வழிதெரியாத அம் மூவரும் தாம் செய்த நற்கிரியைகளை முன்வைத்து இறைவனிடம் பிரார்த்தித்தார்கள் என்பது புகாரி மற்றும் முஸ்லிம் கிரந்தங்களில் இடம் பெற்றிருக்கின்றது. அதே போன்று ஒரு மனிதனுக்கு ஏற்பட்ட தீங்குகளை முன் வைத்தும் பிரார்த்திக்கலாம். உதாரணமாக யாஅல்லாஹ் எனக்கு தீங்கு ஏற்பட்டிருக்கின்றது உனது அருளால்தான் அதனை நீ நீக்கிவிட வேண்டும் என பிரார்த்திக்கலாம். அல்லது ஒருவன் தனக்கு இழைத்துக் கொண்ட அநீதியைக் கொண்டும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கலாம். யூனுஸ் (அலை) அவர்கள் பிரார்த்தித்த பிரார்த்தனையைப்பற்றி

அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். நிச்சயமாகத் துன்பம் என்னைப் பீடித்துக் கொண்டது. நீயோ கிருபையாளர்களிலெல்லாம் மிகக் கிருபையாளன் என்று)பிரார்த்தனை செய்து) அழைத்தார்(21.83).

மேலும் கூறுகின்றான். உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் (வேறு ஒருவனும்) இல்லை. நீ மிகப் பரிசுத்தமானவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டேன். என்று (பிரார்த்தனை செய்து) அழைத்தார்(21.87).

மேலும் பிழைபொறுக்கத் தேடுவது கொண்டும் பிரார்த்திக்கலாம். அதற்குதாரணமாக. இறைவா! நான் செய்த பாவங்களைமிட்டு உன்னிடம் பிழை பொறுக்கத் தேடுகின்றேன். எனவே எனது பாவங்களை மன்னித்தருள்வாயாக! எனப் பிரார்த்தித்துக் கொள்ளலாம். மேற்கூறப்பட்ட பிரார்த்தனை முறைகளுக்கு இஸ்லாம் ஒரே சட்டத்தை வழங்காது அவைகளில் அல்லாஹ்வின் பெயர் பண்புகள், தவ்ஹீத், ஈமான் போன்றவைகளைக் கொண்டு பிரார்த்திப்பதைக் கட்டாயக் கடமையென்றும், நற்கிரியைகளைக் கொண்டு பிரார்த்திப்பதை விரும்பத்தக்கதென்றும் சட்டம் வகுத்திருக்கின்றது.

- உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இறைநேசர்கள், நல்லடியார்களிடம் தமக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுதல்.

மேற்கூறப்பட்ட அனைத்து பிரார்த்தனைகளையும் இஸ்லாம் நமக்கு ஆகுமாக்கியிருக்கின்றது. அத்தோடு அவைகளின் பிரகாரமே நமது பிரார்த்தனைகளை அமைத்துக் கொள்ளுமாறும் கட்டளையிட்டிருக்கின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம்.

எனவே சிறிய இணையிலோ, பெரிய இணையிலோ கொண்டுபோய் சேர்க்கும் பித்அத்தான பிரார்த்தனை (வஸீலா)களை விட்டும் விலகி நடப்பது ஏகத்துவ அடிப்படையில்

வாழும் ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமையாகும். ஏனெனில் அவ்வாறு இஸ்லாத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்தான பிரார்த்தனை (வஸீலா)களைக் கொண்டு பிரார்த்திப்பது இஸ்லாம் நமக்கு பிரார்த்தனையில் வரையறுத்த எல்லையை மீறுவதைக் குறிக்கின்றது. அது மட்டுமின்றி இஸ்லாம் அனுமதிக்காத வழிமுறைகளைக் கொண்டு பிரார்த்திப்பதால் நமது அப்பிரார்த்தனைக்கு அல்லாஹ் ஒருபோதும் விடையளிக்கவும் மாட்டான். அதற்கு மாற்றமாக நாம் குர்ஆன், ஹதீஸில் வந்திருக்கும் துஆக்களைக் கொண்டு பிரார்த்திக்கும்போது அப்பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்று விடையளிப்பதுடன், அவ்வாறு பிரார்த்தித்தமைக்காக தனது அடியான் தனது கட்டளைக்கு வழிப்படுகின்றான் என நன்மையையும் எழுதி விடுகின்றான். மேலும் இஸ்லாம் தடுத்தவைகளில் நாம் ஈடுபட்டு நம்மை நாமே அழித்துக் கொள்ளாமல் நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வோடு இருந்து கொள்ள வேண்டும்.

**கப்றுகளை வணக்கஸ்தலங்களாக மாற்றுதல்.**

கப்றுகளை வணக்கஸ்தலங்களாக மாற்றிக் கொள்ளல் என்று நாம் கூறும்போது, அது பல கருத்துக்களை உள்ளடக்கியிருக்கின்றது. அவைகள் பின்வருமாறு.

1. கப்றுகளில் பள்ளிகளை நிர்மாணித்தல்.
2. அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்ய வேண்டிய வணக்கங்களை செய்வதற்கு மிகவும் சிறந்த இடம் எனக்கருதி கப்றுகளிடத்தில் சென்று அவ்வணக்கங்களை நிறைவேற்றுதல். இவ்வாறு அல்லாஹ்வுக்குச் செய்யும் வணக்கங்களை கப்றுகளிடத்தில் போய் செய்து வரும் பழக்கம் அன்றைய அறியாமைக்கால மக்கள் மத்தியில் காணப்பட்டதால்தான் நபி (ஸல்) அவர்கள் அதனைக் குறிப்பிட்டுக்கூறி கப்றுகளுக்கு மத்தியில் தொழுகை நடத்துவதை தடுத்தார்கள்.

3. அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்ய வேண்டிய வணக்கங்களில் சிலதை கப்றுகளில் அடக்கப்பட்டிருக்கும் இறைநேசர்களுக்கும், வலிமார்களுக்கும் வருதல்.
4. இறைநேசர்களது அல்லது நல்லடியார்களது கப்றுகளை தரிசிப்பதற்காக அக்கப்றுகள் இருக்கும் இடங்களுக்கு பிரயாணம் மேற்கொள்தல்.
5. கப்றுகளைக்கட்டி விளக்கேற்றி, அதிலே பெயர் அல்லது குர்ஆன் வசனம் போன்றவைகளை எழுதி, திரை போட்டு, சந்தனக் கட்டைகளைப் பற்ற வைத்து அவைகளை கண்ணியப்படுத்தல்.
6. இஸ்லாம் எவ்வாறு கப்றுகளை தரிசிக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றதோ அதற்கு மாற்றமாக அக் கப்றுகளைத் தரிசித்தல்.

மேற்கூறப்பட்ட ஆறு வகையான வழிமுறைகளில் ஒரு வகையிலாவது ஒருவன் ஈடுபடுவானேயானால் அவன் கப்றுகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொண்டான் என்ற குற்றத்துக்கு ஆளாகிவிடுகின்றான்.

மேலும் கப்றுகளை வணக்கஸ்தலங்களாக மாற்றிக் கொள்வதையிட்டு நபி (ஸல்) அவர்கள் கடுமையாக எச்சரித்து விட்டுச் சென்றுள்ளார்கள். அவ்வாறான எச்சரிக்கைகளில் சிலதை இங்கே எடுத்து நோக்குவோம். நபி (ஸல்) அவர்கள் மரணிப்பதற்கு சில நாட்களுக்கு முன் கூறியதை ஆயிஷா (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். தமது நபிமார்களுடைய கப்றுகளை வணக்கஸ்தலங்கலாக எடுத்துக் கொண்ட யூத, கிறிஸ்தவர்களை அல்லாஹ் சபிப்பானாக என சபித்தார்கள் (புகாரி,முஸ்லிம்).

மேலும் நபி (ஸல்) அவர்கள் அவர்களது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது சில பெண்கள் அவர்களிடம் வந்து, தாம் ஹபஷா நாட்டில் கண்ட மாரியா எனும் கோயிலைப் பற்றியும், அதிலிருக்கும் உருவங்களைப் பற்றியும், அதனது அழகைப்பற்றியும் புகழ்ந்து கூறிக் கொண்

டிருந்தார்கள். அப்போது நபியவர்கள் தனது தலையை மெது வாக உயர்த்தியவராக சற்று எழுந்து அவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறுகின்றார்கள். நீங்கள் புகழ்ந்து கூறிக் கொண் டிருக்கக்கூடிய சிலைகளைச் செய்தவர்கள் எப்படியானோர் தெரியுமா? அவர்களில் ஒரு இறைநேசர், அல்லது நல்லடியார் மரணித்து விட்டால் அவரை கப்றிலே அடக்கிவிட்டு அக்கப் றிலே பள்ளியைக்கட்டி விடுவார்கள். அத்தோடு அதிலே அவர்க ளது உருவங்களையும் வரைந்து விடுவார்கள். அவர்கள்தான் அல்லாஹ்விடத்தில் மிகவும் கெட்டவர்களாவார்கள் எனக் கூறி னார்கள்(புகாரி,முஸ்லிம்).

மேலும் நபி(ஸல்)அவர்கள் மரணிக்க ஐந்து நாட்களுக்கு முன் அறிவித்ததாக ஜுன்துப் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், உங்களுக்கு முன்னால் வாழ்ந்த சமுதாயத்தினர் கப்றுகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொண்டார்கள். அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள் கப்றுகளை வணக்கஸ்தலங்களாக எடுத் துக் கொள்ளாதீர்கள். அதனை விட்டும் உங்களை நான் தடுத்து எச்சரிக்கை செய்கின்றேன் என்றார்கள்(முஸ்லிம்). மேலும் கப்றுகளின் பக்கம் திரும்பித் தொழுவதைப் பற்றிக் கூறுகையில், கப்றுகளை முன்னோக்கித் தொழவோ, அதன்மீது உட்காரவோ வேண்டாம் எனத்தடுத்துள்ளார்கள்(முஸ்லிம்).

மேற்கூறப்பட்ட நபிமொழிகளின் பிரகாரம் நபிமார்களதும், இறைநேசர்களதும், நல்லடியார்களதும் கப்றுகளிலே கட்டப்பட்ட பள்ளிகளில் தொழுவதுகூடாது என்பதுடன், அவ்வாறு தொழக் கூடிய முறையில் அக்கப்றுகளிலே பள்ளிகளைக் கட்டுவது ஹராமாகும் என்பதும் தெளிவாகின்றது. மேலும் நாம் கப்று களை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொள்வதை நபி(ஸல்) அவர்கள் வணங்கப்படும் சிலைகளுக்கு சமமாகக் கருதியிருக் கின்றார்கள். மேலும் நபி (ஸல்) அவர்களும், மக்கள் தனது கப்றை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொள்வார்கள் என்ப தைப் பயந்து அல்லாஹ்விடம் பிரார்த்திக்கையில் இறைவா! எனது கப்றை மக்கள் வணங்கும் சிலையாக ஆக்கிவிடாதே!

எனப் பிரார்த்தித்துவிட்டு பின்வருமாறு கூறுகின்றார்கள். எக் கூட்டத்தினர் தமது நபிமார்களின் கப்றுகளை வணக்கஸ் தலங்களாக மாற்றிக் கொண்டார்களோ அவர்கள் மீது அல்லாஹ் வின் கோபம்(சாபம்)கடுமையாகி விட்டது(முவத்தா).

மற்றுமொரு முறை கூறும்போது, நீங்கள் எனது கப்றை கொண்டாடப்படும் ஒரு இடமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மாற்றமாக நீங்கள் எங்கிருந்த போதும் என்மீது ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத்தை அல்லாஹ் எனக்கு எத்திவைக்கின்றான் எனக்கூறினார்கள்(சுனன்). மேலும் கப்று களுக்குச் சென்று விளக்கேற்றும் பெண்களைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், பெண்கள் கப்றுகளை தரிசிப்பதையும், அதற்கு விளக்கேற்றி வைப்பதையும் தடுத்துள்ளார்கள் என ஒரு அறிவிப்பில் பதிவாகியிருக்கின்றது. வேறொரு அறிவிப்பில் கப்றுகளைத் தரிசிக்கும் பெண்களையும், அதிலே விளக்கேற்றி வைப்பவர்களையும், அக்கப்றுகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொள்பவர்களையும் சபித்துள்ளார்கள் எனப் பதிவாகியுள்ளது(அபூதாவுத்).

கப்றுகள் இருக்கும் இடங்களுக்கு பிரயாணம் மேற் கொண்டு அங்குள்ள கப்றுகளை தரிசிக்க முடியுமா? எனப் பார்த்தால் அதனையும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள் ளார்கள். அதனைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், மூன்று பள்ளிகளுக்கே தவிர பிரயாணச் சுமைகள் சுமக்கக் கூடாது. அவைகள் மஸ்ஜிதுல் ஹராம், மதீனாப்(எனது இப்) பள்ளி, மஸ்ஜிதுல் அக்ஸா போன்றவைகளாகும் எனக் கூறி னார்கள்(புகாரி,முஸ்லிம்).

மேலும் அக்கப்றுகளிலோ, அல்லது அவைகளின் பக்கமா கவோ திரும்பித்தொழ முடியுமா? எனப்பார்த்தால் அதனையும் நபியவர்கள் தடுத்திருக்கின்றார்கள். அதனைப்பற்றி அவர்கள் கூறுகையில் மையவாடிகளையும், மலசல கூடங்களையும் தவிர பூமியிலுள்ள அனைத்து இடங்களும் பள்ளிகளாகும் எனக்கூறியி ருக்கின்றார்கள் (அஹ்மத்) மேலும் இப்னு உமர் (ரலி) அவர்

கள் கூறுகையில், நாம் மையவாடியிலே தொழுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் எனக்கூறியிருக்கின்றார்கள். வேறொரு அறிவிப்பில் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், கப்றுகளுக்கு மத்தியில் தொழுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்திருக்கின்றார்கள் எனக்கூறுகின்றார்கள். மற்றுமோர் இடத்தில் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், எனது நண்பர் நபி (ஸல்) அவர்கள் நான் மையவாடிகளில் தொழுவதைத் தடுத்துள்ளார் எனக்கூறுகின்றார்கள்(அபூதாவுத்).

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களினடிப்படையில் மனிதர்கள் மரணித்து அடக்கப்பட்ட கப்றுகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொள்வதினது சட்டங்களை மூவகையாகப் பிரிக்கலாம். அவைகள் பின்வருமாறு.

1. நாம் கப்றுகளில் அடக்கப்பட்டிருக்கும் இறைநேசர்களிடமும், நல்லடியார்களிடமும் நமது தேவைகளைக் கேட்டுப் பிரார்த்தித்து, அவர்களிடம் பாதுகாப்புத்தேடி, நமது கஷ்ட துன்பங்களை நீக்கி வைக்குமாறு அவர்களிடம் மன்றாடுதல். இவ்வாறு நாம் செய்தால் நாம் செய்யக்கூடிய அச்செயல் நமது உள்ளத்திலிருக்கும் வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத்தவிர வேறெவரும் இல்லை எனக் கூறும் தவ்ஹீதையே அழித்து விடக்கூடிய பெரிய இணையைச் செய்தவர்களாக ஆகிவிடுகின்றோம்.
2. மேற்கூறப்பட்டவர்கள் அடக்கப்பட்டுள்ள கப்றுகளை தொட்டு முத்தமிட்டு, அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய வணக்கங்களை அக்கப்றுகளிடத்தில் நிறைவேற்றல். அவ்வாறு நாம் நமது வணக்கங்களைச் செய்து வருவோமேயானால் அச்செயலின் மூலம் நமது தவ்ஹீதின் பூரணத்துவத்தை நாமே குறைத்துக் கொண்டவர்களாக ஆகிவிடுகின்றோம்.
3. மேற்கூறப்பட்ட அக்கப்றடிகளுக்குச் சென்று அவைகளுக்கு ஆடை போர்த்துதல், வெள்ளையடித்தல், அதிலே குர்ஆன் வசனங்கள், பெயர்கள் போன்றவைகளை எழுதுதல். மேலும்

அக்கப்றுகளைத் தரிசிக்க அவ்விடங்களுக்கு பிரயாணம் மேற்கொள்ளல் போன்றவை அனைத்தும் இஸ்லாத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்துக்களாகும்.

மேற்கூறப்பட்ட மூவகைகளிலும் ஈடுபடுபவனுக்குரிய சட்டம் யாதெனப் பார்க்கும்போது, மூன்று விதமான சட்டங்களை இஸ்லாம் வகுத்திருக்கின்றது. எவன் முதலாவது வகையில் ஈடுபடுகின்றானோ அவன் பெரிய இணையைச் செய்து இஸ் லாத்திலிருந்தே வெளியேறி விடுகின்றான். இரண்டாவது வகை யில் ஈடுபடுபவன் மார்க்கத்திலிருந்து வெளியேறா விட்டாலும், பெரிய இணையின்பால் இட்டுச் செல்லக்கூடிய சிறிய இணை யைச் செய்தவனாக ஆகிவிடுகின்றான். மூன்றாவது வகையைப் பொறுத்த வரையில் அவை இஸ்லாத்தில் புதிதாக உருவாக்கப் பட்டிருப்பதாலும், அவைகளை இஸ்லாம் தடுத்திருப்பதாலும் அவைகளில் ஈடுபடுவது ஹராமாகும்.

மேற்கூறப்பட்டவாறு கப்றுகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொள்வதை தடுக்கப்பட்டிருப்பதற்கு முக்கிய கார ணம் யாதெனில், அக்கப்றுகளை நாம் வணக்கஸ் தலங்களாக எடுக்கும்போது நமக்குத் தெரியாமலே அவைகள் நம்மை அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்பதின்பால் இட்டுச் சென்று விடு கின்றன என்பதனாலாகும். அத்துடன் அவ்வாறு அவைகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொள்வதற்கு குர்ஆனிலோ, ஹதீஸிலோ,அல்லது நபித்தோழர்களின் வாழ்க்கை வரலாற்றிலோ எவ்வித ஆதாரமும் கிடையாது. இதனால்தான் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகையில், அவ்வாறு கப்றுகளை வணக்கஸ் தலங்களாக எடுத்துக் கொள்வதை தடுக்காமலிருந்திருந்தால் நபி (ஸல்) அவர்களும் அவர்களது கப்றை வெளியாக்கியிருப் பார்கள். அவர்கள் தனது கப்றை வீட்டினுள் அடக்குமாறு கூறியதெல்லாம் அக்கப்றை மக்கள் வணக்கஸ்தலமாக எடுத் துக் கொள்ளக் கூடாதென்பதற்காகும் எனக்கூறுகின்றார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்களும் தனது கப்றை மக்கள் வணக்கஸ்தலமாக ஆக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காக

அதனை முன்கூட்டியே அல்லாஹ்விடம் பிரார்த்தித்து விட்டுச் சென்று விட்டார்கள். அவர்கள் பிரார்த்திக்கும்போது இறைவா! எனது கப்றை மக்கள் கொண்டாடும் ஒரு சிலையாக ஆக்கி விடாதே எனப் பிரார்த்தித்துள்ளார்கள். வேறொரு அறிவிப்பில் எனது சமுதாயத்தினரே! எனது கப்றை கொண்டாடப்படும் ஒரு இடமாக நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். மாற்றமாக நீங்கள் எங்கிருந்த போதிலும் என்மீது ஸலவாத்துச் சொல்லுங் கள். அதனை அல்லாஹ் எனக்கு சேர்த்து வைக்கின்றான் எனக் கூறியிருக்கின்றார்கள். மேலும் அல்லாஹ் முன்பிருந்த ஒரு சமுதாயத்தினர் கூறிக்கொண்டிருந்த விஷயத்தை கூறும் போது பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். நம் காரியத்தில் (விவாதித்து அதில்) வெற்றி பெற்றார்களே அவர்கள், இவர்கள் (இருந்த இடத்தின்) மீது ஒரு பள்ளியை நிச்சமாக நாம் அமைத்து விடுவோம் என்று கூறினார்கள்(18.21).

மேற்கூறப்பட்டவாறு இறைநேசர்களதும், நல்லடியார்க ளதும் கப்றுகளை வணக்கஸ்தலங்களாக நாம் எடுத்துக் கொள்ளும்போது முஷ்ரிகீன்களும், கிரிஸ்தவர்களும், யூதர்களும் செய்து வந்த ஒரு காரியத்தை செய்தவர்களாகி விடுகின்றோம். அவ்வாறு அவர்கள் செய்த காரியங்களை நாமும் செய்யும் போது அந்த வகையில் அவர்களுக்கு ஒப்பாகி விடுகின்றோம். முஸ்லிம்கள் அவ்வாறு அவர்களுக்கு ஒப்பாகுவதை நபி (ஸல்) வெறுத்தது மட்டுமின்றி அவ்வாறு ஒப்பாகுபவர்களை சபித்துமிருக்கின்றார்கள். அதனை நபி(ஸல்)அவர்கள் கூறுகை யில், தமது நபிமார்களது கப்றுகளை வணக்கஸ் தலங்களாக எடுத்துக் கொண்ட கிரிஸ்தவர்களையும், யூதர்களையும் அல் லாஹ் சபிப்பானாக! எனப் பிரார்த்தித்திருக்கின்றார்கள்.

நாம் மேற்கூறியது போன்று கப்றுகளை வணக்கஸ் தலங்க ளாக எடுத்துக் கொள்வதினதும், அவ்விடங்களில் போய் வணக்கங்களில் ஈடுபடுவதினதும் சட்டங்களில் வேறுபாடுகள் இருப்பினும், அவைகளில் ஈடுபடும் ஒரே காரணத்தினால் அந்த யூத, கிரிஸ்தவர்களுக்கு நாம் ஒப்பாகி விடுகின்றோம். அவ்வாறு

ஒப்பாகுவதை இஸ்லாம் ஹராமெனக்கூறி சட்டம் வகுத்திருக் கின்றது. மேலும் இஸ்லாம் அதனை ஹராம் எனக்கூறி சட்டம் வகுத்திருக்கும் அதேநேரம் அது பெரும் பாவத்திலுள்ளதாக இருந்தால் அதிலே ஈடுபடுபவன் பின்வரும் நபிமொழிக்கு ஆளாகி விடுகின்றான். நபி(ஸல்)அவர்கள் கூறுகையில், எவன் ஒரு கூட்டத்தினர் செய்யும் ஒரு செயலைச் செய்து அவர்க ளுக்கு ஒப்பாகி விடுகின்றானோ அவன் அவர்களைச் சார்ந்தவ னாவான் எனக்கூறியுள்ளார்கள்.

எனவே உண்மையான ஒரு தவ்ஹீத்வாதி தனது அனைத்து வணக்கங்களையும் அல்லாஹ்வுக்கு மாத்தி ரமே செய்கின்றேன் என்ற தூய எண்ணத்துடன் செய்து கொள்வது அவனது கட்டாயக் கடமையாகும். அதனடிப்படையில் கப்றுக ளைத் தரிசிக்கச் செல்லும் ஒருவன் இஸ்லாம் கற்றுத் தந்ததின் பிரகாரம் கப்றுகளிலே அடக்கப்பட்டிருப்பவர்களுக்கு பிரார்த்திக்க வும், மரணித்த அவர்கள் மூலம் படிப்பினை பெறவும், அவ் வாறு தரிசிக்கச் செல்வதனால் அல்லாஹ் எந்நன்மையைத் தரக் காத்திருக்கின்றானோ, அந்நன்மையை பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், நபி (ஸல்) அவர்களது வழிமுறையை பின் பற்றி நடக்கின்றேன் என்ற நன்நோக்குடனுமே தான் அதனைத் தரிசிக்கச் செல்ல வேண்டும். அதற்கு மாற்றமாக அக்கப்றுக ளில் அடக்கப்பட்டிருப்போரிடம் பிரார்த்திக்குமாறு கேட்கவோ, அல்லது அவர்களிடம் தமது பிரார்த்தனையை முன்வைக் கவோ, அல்லது நேர்ச்சைகளை அக்கப்றுகளிடத்தில் அறுத் துப் பலியிடவோ செல்லக்கூடாது.

தற்காலத்தில் சில கூட்டத்தினர் செய்து வரும் பழக்க வழக்கங்களான கப்றுகளைத் தொட்டு முத்தமிடுவதும், அவை களுக்கு நேர்ச்சை செய்வதும், அக்கப்றடிகளில் அறுத்துப் பலியிடுவதும், அவைகளைச் சுற்றி வலம் வருவதும், அதில் அடக்கப்பட்டிருப்போரிடம் பிரார்த்திப்பதும் இஸ்லாம் என்ற பெயரில் புதிதாக ஏற்படுத்தப்பட்டவைகளாகும். அவ்வாறானவை களை வணக்கம் எனக்கருதி அவைகளில் நாம் ஈடுபட்டால்

அன்றைய அறியாமைக்கால மக்கள் செய்து வந்த மூடப்பழக்க வழக்கங்களை செய்தவர்களாக ஆகிவிடுகின்றோம்.

மேற்கூறப்பட்ட அந்த இணைகளைச் செய்து வருபவர்கள் தான் இந்த உலகம் அழிக்கப்படுவதற்கு முன்னர் வெளிவரவிருக்கும் இஸ்லாத்தின் எதிரியும், ஷைத்தானின் தோழனுமான தஜ்ஜாலுக்கு துணையாயிருப்பார்கள்.

**இறைநேசர்களை எல்லை மீறி மதித்தல்.**

இறைநேசர்களை எல்லை மீறிப்புகழ்வதனுடைய சட்டம் யாது? என்பதைப் பார்ப்பதற்கு முன்னால் இறைநேசர்கள், நல்லடியார்கள் என்போர் யார் என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இஸ்லாம் அந்த இறைநேசர்களைப் பற்றிக் கூறும்போது, இஸ்லாத்தை யார் அதனது தூய வடிவில் கடைபிடித்து நடக்கின்றார்களோ அவர்கள் அனைவரும் இறை நேசர்களும், நல்லடியார்களுமாவார்கள் எனக்கூறிக் கொண்டிருக்கின்றது.

அந்த இறைநேசர்களை, நல்லடியார்களை எல்லை மீறி மதிப்பதென்றால் இஸ்லாம் அவர்களை எந்த வரையறைக்குள் வைத்து மதிக்கும்படி எங்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றதோ அந்த வரையறைகளையும் மீறி அவர்களை வார்த்தையாலோ, செயலாலோ புகழ்ந்து மதிப்பதையே குறிக்கின்றது. அவ்வாறு அவர்களை புகழ்ந்து மதிப்பதை இருவகையாகும்.

1. நமது வாய் வார்த்தையால் அவர்களை எல்லை மீறிப் புகழ்தல். இவ்வகை மூன்று பகுதிகளாகப் பிரிகின்றன. அவை பின்வருமாறு.

- அல்லாஹ்வுக்குரிய சில பண்புகள் கப்றில் அடக்கப்பட்டிருப்பவர்களிடம், அல்லது உயிரோடிருப்பவர்களிடம் இருப்பதாக நம்புதல். அல்லது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உதவியின்றி தானாகவே நன்மை, தீமைகளை வரவழைக்கக் கூடியவரென நம்புதல். அல்லது நபியவர்களி

டம் பிரார்த்தித்து, பாதுகாப்புத் தேடுதல் போன்ற பெரிய இணையைச் சார்ந்த தவ்ஹீதை அழிக்கக் கூடியவைகள்.

- கப்றில் அடக்கப்பட்டிருப்பவரைக் கொண்டு சத்தியம் செய்தல். அல்லது அல்லாஹ்வும், நீங்களும் நாடியதால் தான் இந்தவேலை சிறப்பாக முடிந்தது. அதேபோன்று அவர் உரிய சந்தர்ப்பத்தில் வந்திருக்காவிட்டால் நமக்கு என்னென்னவெல்லாமோ நடந்திருக்கும் என்பன போன்ற வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்ற சிறிய இணையைச் சார்ந்த தவ்ஹீதின் பூரணத்துவத்தை அழிக்கக் கூடியவைகள்.

- கஞ்சத்தனம் நிறைந்த ஒரு மனிதரைப் பார்த்து கொடையாளியெனவும், ஒரு கோழையைப் பார்த்து தைரியசாலி எனவும் வர்ணிப்பதைப் போல ஒருவரிடம் அறவே காணப்படாத ஒரு பண்பைக்கொண்டுஅவரை வர்ணித்தல். இவ்வாறு வர்ணிப்பது பொய்யாய் இருப்பதுடன், அவ்வாறு கூறுவது பெரும் பாவங்களிலுள்ளதுமாகும். இவ்வகையை இஸ்லாம் ஹராம் எனக்கூறிக் கொண்டிருக்கின்றது.

2. மார்க்கம் அனுமதித்த வரையறையை மீறி ஒருவன் தனது செயல்களால் அவர்களைப் புகழ்தல். இவ்வகையும் மூன்று பகுதிகளாகப் பிரிகின்றன. அவை பின்வருமாறு.

- அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்யப்பட வேண்டிய வணக்கங்களான ருகூஉ, சுஜூது போன்றவைகளை, மரணித்து கப்றில் அடக்கப்பட்டிருப்போருக்குச் செய்வது போன்ற பெரிய இணையைச் சார்ந்த தனது தவ்ஹீதை அழிக்கக் கூடியவைகள்.

- அல்லாஹ்வை தொழுது வணங்குவதற்கும், அவனுக்கு சுஜூத் செய்வதற்கும் சிறந்த இடம் மரணித்தவர்கள் அடக்கப்பட்டிருக்கும் மையவாடிகள் என நினைத்து அவ்விடங்களில் போய் தொழுது சுஜூது செய்தல். மேலும் குர்

ஆன் ஓதுவதற்கு மிகவும் பொறுத்தமான இடம் மையவாடிகள் என நினைத்து அவ்விடங்களுக்குப்போய் ஓதுதல் போன்ற சிறிய இணையைச் சார்ந்த தவ்ஹீதின் பூரணத்துவத்தை அழிக்கக் கூடியவைகள்.

- மரணித்தவர்கள் அடக்கப்பட்டிருக்கும் கப்றுகளுக்கு வெள்ளையடித்தல். அதிலே குர்ஆன் வசனம், மற்றும் பெயர் போன்றவைகளை எழுதுதல். மேலும் அவைகளை அழகு படுத்திக் கட்டுதல் போன்ற இஸ்லாத்துக்கு அப்பாற்பட்டதும், நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றில் இல்லாததுமான புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்தென்பதுடன், பெரும் பாவங்களிலுள்ளதாகும். இவ்வகையை இஸ்லாம் ஹராமெனக் கூறிக்கொண்டிருக்கின்றது.

மேலும் இறைநேசர்களை, நல்லடியார்களை வரையறை மீறி மதித்தல் எனும்போது, அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் அவர்களிடம் பறகத் பெறும் நோக்கில் அவர்களை மதித்து நடப்பதையும் குறிப்பிடலாம். இவ்வகையும் மூன்று பகுதிகளாகப் பிரிகின்றன. அவைகள் பின்வருமாறு.

- உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நல்லடியார்களிடம் சென்று அல்லாஹ்விடம் தமக்காக பிரார்த்திக்க வேண்டுதல். இவ்வாறு பிரார்த்திக்க வேண்டுவதை இஸ்லாம் நமக்கு அனுமதித்திருக்கின்றது.
- அவர்களது அடிச்சுவடுகள், அவர்களது மேனி, அவர்களது கழிவுப் பொருட்கள் போன்றவைகளைக் கொண்டு பறகத்பெற முனைதல். இவ்வாறு செய்வது நபி (ஸல்) அவர்கள் உயிருடனிருந்த காலத்தில் அவர்களிடம் மாத்திரமே தவிர ஏனையவர்களிடம் அவ்வாறு நடந்து கொள்வது ஹராமாகும். இதனால் தான் நபித்தோழர்கள் எவரும் நபியவர்களது மரணத்தின் பின் அவர்களது எப்பொருளைக் கொண்டும் பறகத் பெற்றதாக நமக்கு அறியத்தரப் படவில்லை. இவ்வாறான முறையில் பறகத் பெறும் நோக்

கில் செயல்படுபவனின் சட்டம் அவனது எண்ணத்துக் கேற்ப மாறுபடுகின்றது. அவ்வாறு அவன் பறகத் பெறும் நோக்கில் அவ்விஷயத்தில் ஈடுபடும்போது அவர் மூலமா கத்தான் அந்த பறகத் கிடைக்கின்றதென அவன் எண்ணி னால், அவனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய பெரிய இணையைச் செய்து விட்டவனாகக் கருதப்படுகின் றான். அவ்வாறில்லாமல் அல்லாஹ் தான் அதனை படைத் திருக்கின்றான். அவன்தான் அதனை வழங்குகின்றான். என்றாலும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு இவர்தான் காரணமாக இருக்கின்றார் என ஒருவன் எண்ணினால் அவ்வாறு எண்ணுபவன் அவனது தவ்ஹீதின் பூரணத்து வத்தை அழிக்கக்கூடிய சிறிய இணையில் ஈடுபட்டவனா கக் கருதப்படுகின்றான்.

- அவர்கள் வாழ்ந்து வந்த இடம், மற்றும் அவர்கள் வணங்கிய இடங்கள் போன்றவற்றைக் கொண்டு பறகத் பெற முற்படுதல். இவ்வாறான முறையில் ஈடுபடுபவனும் தனது தவ்ஹீதை அழித்தொழிக்கக் கூடிய பெரிய இணை யில் ஈடுபட்டவனாகவே கருதப்படுகின்றான். அபூவாகித் அல்லைசி (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நாங்கள் ஹுனைன் யுத்தத்தின்போது நபி(ஸல்)அவர்களுடன் சென்று கொண்டிருந்தோம். அந்த காலகட்டத்தில் நாம் புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்தவர்களாகவுமிருந்தோம். ஆதலால் இஸ் லாத்தைப்பற்றிய போதிய அறிவு எங்களிடமிருக்கவில்லை. அந்த ஹுனைன் என்ற இடத்தில்தான் முஷ்ரிகீன்கள் இஃதி காபில் இருந்து அவர்களது ஆயுதங்களை தொங்க விடக் கூடிய “தாது அன்வாத்” என்ற இடமும் இருந்தது. நாம் அவ்விடத்தில் இருக்கும் ஒரு மரத்துக்கருகாமையால் சென்று கொண்டிருக்கையில் நபியவர்களிடம் அல்லாஹ் வின் தூதரே! அந்த முஷ்ரிகீன்களுக்கு “தாது அன்வாத்” இருப்பதுபோன்று நமக்கும் ஒன்றை ஏற்படுத்தித் தாருங்

கள் எனக்கூறினோம். அதனைச் செவியுற்ற நபியவர்கள் அல்லாஹு அக்பர் இது வழிமுறை வழிமுறையாக அமைந்து விட்டதே எனக்கூறியவராக, அல்லாஹ்வின் மீதாணையாக நீங்கள் மூஸா (அலை) அவர்களின் சமுதாயம் கேட்டது போன்றல்லவா என்னிடம் கேட்டுள்ளீர்கள். நிச்சயமாக நீங்கள் உங்கள் முன்னய சமுதாயத்தினரின் வழிமுறைகளைப் பின்பற்றக் கூடியவர்கள் எனக்கூறிவிட்டு பின் வரும் திருவசனத்தை ஓதிக் காட்டினார்கள். பனூஇஸ்ரவேலர்கள் மூஸா (அலை) அவர்களிடம் கேட்டது போன்று நீங்கள் என்னிடம் கேட்டுள்ளீர்கள் என, அவர்களுக்கு தெய்வங்கள் இருப்பதைப் போல் எங்களுக்கும் ஒரு தெய்வத்தை (நாங்கள் வணங்குவதற்கு) ஆக்கி வைப்பீராக! என்று கூறினார்கள். அதற்கு (மூஸாவாகிய) அவர் நிச்சயமாக நீங்கள்அறியாதவர்களான ஓர் கூட்டத்தினராவீர்கள் என்று கூறினார்(7.138)(திர்மிதி).

இவ்வாறு அல்லாஹ்வின் நல்லடியார்களை இஸ்லாம் இட்ட வரையறையைத்தாண்டி மதிப்பதால்தான் உலகிலே மனிதர்கள் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்துக் கொண்டிருப்பதைக் காணுகின்றோம். மேலும் மனிதர்கள் முதன்முறையாக அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்பதற்கு ஆரம்பித்ததே நபி நூஹ் (அலை) அவர்களின் காலத்திலாகும். அவர்கள் காலத்தில் வாழ்ந்த அச்சமுதாயத்தினர் அவர்களது காலத்திலிருந்த நல்லடியார்களை அதிகம் நேசித்து வந்தார்கள். அவர்கள் மரணித்ததும் அவர்களை நினைவு கூர்வதற்காக அவர்களை சிலைகளாக செய்து வைத்தார்கள். அதன்பின் சிறிது காலப்போக்கில் அக்காலத்தில் வாழ்ந்து வந்த மார்க்க அறிஞர்கள் மறைந்துபோய் புதியதோர் சமுதாயம் உருவாகியதும் அந்த உருவங்களை அவர்கள் ஏன் வரைந்து வைத்தார்கள் என்ற உண்மை அறியாது அவைகளை வணங்க ஆரம்பித்தார்கள். அன்றிலிருந்து தான் இந்த மனித சமுதாயம் அல்லாஹ்வை வணங்குவதை விட்டுவிட்டு அவனுடன் இணைத்து வேறு சிலைகளையும் வணங்க ஆரம்

பித்தார்கள். இவ்வாறுதான் உலகில் சிலை வணக்கமே ஆரம்பித்தது.

மேலும் இறைநேசர்களையும், நல்லடியார்களையும் எல்லைமீறி மதிப்பதை அல்லாஹுத்தஆலா தனது அருள்மறையிலே தடுத்திருக்கின்றான். அதனைப்பற்றி அவன் பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். வேதத்தையுடையவர்களே! உங்கள் மார்க்கத்தில் நீங்கள் அளவு கடந்து செல்லாதீர்கள்(4.171). பிறிதொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றான். நீங்கள் (வணங்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் கண்டீர்களா?(53.19). என்ற இறைவசனத்துக்கு முஜாஹித் (ரஹ்) அவர்கள் விளக்கமளிக்கையில், லாத் என்ற மனிதர் அக்கிராமவாசிகளுக்கு கஞ்சி காய்ச்சிக் கொடுத்துக் கொண்டிருந்தவர் என்றும், அவரது மரணத்தின் பின் அவரை நேசித்தவர்கள் அவரது கப்றடியிலே சென்று உட்கார்ந்து கொண்டார்கள் என்றும் விளக்கமளிக்கின்றார்.

மேலும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகையில், அந்த லாத் என்ற மனிதர் ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா வருவோருக்கு கஞ்சி காய்ச்சிக் கொடுத்துக் கொண்டிருந்ததாகவும், அவர் வணங்கப்படுவதற்கு முக்கிய காரணமே அவர் செய்த அந்த நற்கிரியைதான் எனவும் கூறுகின்றார்கள். ஆக ஒரு மனிதரை கடவுளின் அந்தஸ்துக்கு இட்டுச் செல்வது, அல்லது ஏனைய மனிதர்களை அக்கடவுளிடம் நெருக்கமாக்கி வைப்பதற்குரிய முறையில் அவரை எடுத்துக் கொள்வது போன்றவைக்கு அவர்கள் வாழும் காலத்தில் மேற்கொண்டு வந்த அந்த நற்கிரியைகளே காரணமாயிருந்து வந்திருக்கின்றது என்பது மேற்கூறப்பட்ட இறைவசனத்துக்கு அளிக்கப்பட்ட இரு விளக்கங்களிலிருந்து தெரிய வருகின்றது.

ஆதலால் அவர்களைப் போன்று நற்கிரியைகளில் ஈடுபடக்கூடிய, மனித சமுதாயத்துக்கு தொண்டு செய்யக்கூடிய நம் போன்ற மனிதர்கள் நமக்கு மத்தியிலும் இருக்கத்தான் செய்வார்கள். அவ்வாறானவர்கள் இருந்தால் அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை யாதெனில், அவர்களை இஸ்லாம்

அனுமதித்த வரையறைக்குள் மதித்து அவர்கள் செய்து வந்த அதிலும் இஸ்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல விஷயங்க ளில் மாத்திரம் அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். மேலும் அவர்களும் நம்மைப்போன்று சாதாரண மனிதர்கள் தான் நன்மைகளில் ஈடுபடும் அதேநேரம் தவறுகளும் செய்யக் கூடியவர்கள் என்பதனையுணர்ந்து, அவர்கள் நற்கிரியைகளில் ஈடுபட்டு வருவதால் நமது சகோதரர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுமிடத்து அவர்களுக்கு உதவி யாக இருந்து கொள்ளவும் வேண்டும்.

அவ்வாறு செய்வதுதான் நாம் அல்லாஹ்வின் நல்லடியார் களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளாகும். அதுவல்லாமல் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் செய்யவேண்டிய வணக்கங்களை அவர்களுக்குச் செய்யும்போது அவர்களை நாம் வணங்கப்படும் சிலைகளாக எடுத்துக் கொண்டவர்களாக ஆகிவிடுகின்றோம். அல்லாஹுத்தஆலா யூத, கிரிஸ்தவர்களைப் பற்றிக் கூறும்போது பின்வருமாறு கூறுகின்றான். (இவ்வாறே) அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள் சந்நியாசிகளையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்ட னர்(9.31).

இத்திருவசனத்துக்கு நபி (ஸல்) அவர்கள் அளித்த விளக்கம் பின்வருமாறு இடம் பெற்றிருக்கின்றது. அதாவது அந்த யூத, கிரிஸ்தவர்கள் அவர்களது பாதிரிமார்களும், சந்நியா சிகளும் ஹராம், ஹலாலைப்பற்றிக் கூறும் விஷயத்தில் உண்மை, பொய் தெரியாதவர்களாக பின்பற்றி வந்தார்கள். மார்க் கத்தில் ஒன்றை ஹலாலாக்கும் உரிமையும், ஹராமாக்கும் உரி மையும் வல்ல நாயன் அல்லாஹ்வுக்கு மாத்திரம் சொந்தமாயி ருக்கையில் அவர்கள் தங்களது மனோஇச்சைக்கேற்ப கூறிவந்த வைகளை இவர்கள் எடுத்து நடந்ததினால்தான் அவர்களை இவர்கள் 'வணங்கப்படும் கடவுள்களாக எடுத்துக் கொண்டார் கள் என அல்லாஹ் கூறுகின்றான் என விளக்கமளித்தார்கள்.

பொதுவாக இஸ்லாத்தில் ஒரு விஷயத்தை மார்க்கமாக்குவதென்பது அல்லாஹ்வுக்கும், அவனது தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களுக்குமுரிய உரிமைகளாகும். அதிலும் மனிதராகிய முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் சில சட்டதிட்டங்களை மார்க்கமாக்கும் விஷயத்தில் தவறுகள் ஏற்படாதவாறு அவர்களை அல்லாஹ் பாதுகாத்து வைத்திருக்கின்றான். அவர்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மனிதர்களும் தவறிழைக்கக் கூடியவர்களாகும். அவர்களால் எதனையும் இஸ்லாத்தில் உருவாக்கவோ, அல்லது இஸ்லாத்திலுள்ள ஒரு சட்டத்தை இல்லை என்று கூறவோ முடியாது. எனவே முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய மனிதர்கள் விஷயத்தில் அவர்கள் நல்லவைகளை அறிவித்துத் தரும்போது மாத்திரம் தான் அவைகளை ஏற்று நடக்க வேண்டும். அதனைத் தெளிவுபடுத்தும் வகையில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அல்லாஹ்வுக்கு மாறுசெய்யும் விஷயத்தில் படைப்பினங்கள் எவருக்கும் வழிப்படக்கூடாது எனக்கூறியிருக்கின்றார்கள். மேலும் அல்லாஹ் கூறும்போது மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்க வில்லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக்கூடிய இணையாளர்கள் அவர்களுக்கு இருக்கின்றார்களா? (42.21). என வினா எழுப்பி அவ்வாறானவர்கள் யாருமில்லை என மறுத்துறைக்கின்றான்.

மேலும் விஸ்தீரணம் எனப்படக் கூடிய பறகத்தை எடுத்து நோக்கும்போது, மனிதன் இவ்வுலகில் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து விதமான பறக்கத்துக்களும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கப் பெறுகின்றன என இஸ்லாம் கூறிக்கொண்டிருக்கின்றது. மேலும் முபாரக் எனும் பெயரும் அவனது திருப்பெயர்களிலுள்ளதாகும். அத்துடன் பறகத் செய்வதென்பதும் அவனது தூய பண்புகளிலுள்ளதாகும். ஆக அந்த பறகத் எனும் வாசகம் கூறும் விஸ்தீரணத்தை மார்க்க அடிப்படையில் எடுத்து நோக்கும்போது இரு வகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு.

- அல்லாஹ்வுடைய தாத்தோடு தொடர்புடைய பறகத்.
- அவனது செயலுடன் தொடர்புடைய பறகத்.

அல்லாஹுத்தஆலா மனிதர்களில் யாருக்கு பறகத் செய்தி ருக்கின்றானோ அவனைத்தான் நாம் பறகத் செய்யப்பட்டவன் எனக்கூறுகின்றோம். நாம் அவ்வாறு பறகத் செய்யப்பட்டிருக் கின்றான் எனக்கூறினாலும் நாம் கூறுகின்ற அவ்வார்த்தை யைத்தான் நம்மால் கேட்க முடியுமேதவிர அந்த பறக்கத்தின் உருவத்தை கண்கொண்டு பார்க்க முடியாது. எனவே அல் லாஹ் எதனையெல்லாம் பறகத் செய்யப்பட்டதெனக் சுட்டிக் காட்டியிருக்கின்றானோ அவை அனைத்தும் பறகத் செய்யப் பட்டதாகும் என நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதன டிப்படையில் மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்ஸா போன்ற பள்ளிகள் பறகத் செய்யப்பட்டவையாகுமென அல்லாஹ் கூறிக் கொண்டிருக்கின்றான். அவ்விரு பள்ளிகளும் பறகத் செய்யப்பட் டிருக்கின்றதென நாம் கட்டாயம் நம்ப வேண்டும். அவைகள் பறகத் செய்யப்பட்டிருக்கின்றதென அல்லாஹ் கூறினாலும், அவைகளிலிருந்து ஏனைய மனிதர்களுக்கும் அல்லது ஏனைய பொருட்களுக்கும் பறகத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற தவறான கருத்தைக் கொடுக்கலாகாது.

எனவே ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு பறகத் செய்யப்படுகின்றது என யாராவது கூறுவாராயின் அதற்கு குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஆதாரம் முன்வைக் கப்பட வேண்டும். அவ்வாறு எவ்வித ஆதாரமும் குர்ஆன், ஹதீஸில் பெற்றுக் கொள்ளப்பட வில்லையாயின் அப்பொரு ளிலிருந்து பறகத் கிடைக்கின்றதென கூறக்கூடாது. இதுதான் அன்றுதொட்டு இன்று வரையும் நாம் கடைபிடித்து வர வேண்டிய இஸ்லாமியக் கோட்பாடாகும்.

பறகத் செய்யப்பட்ட ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கும் பறகத் கிடைக்கின்றதென எவ்வித ஆதாரமு மின்றி நாங்கள் கூறினால் அதைவைத்து ஒவ்வொரு மனிதரும்

அவரவர் விரும்பும் ஒவ்வொரு பொருளையும் குறிப்பிட்டு இப்பொருளிலும் பறகத் இருக்கின்றதென்ற வாதத்துக்கு வந்து விடுவார்கள். அதேபோன்று இன்னும் எத்தனையோ பொருட்க ளைச் சுட்டிக்காட்டி இவைகளிலும் பறகத் கிடைக்கின்ற தெனக்கூறி அவர்கள் நினைத்தவாறெல்லாம் இஸ்லாத்திலில்லா தவைகளை உள்ளவைகளாகக்கூறி அவைகளையும் மார்க்க மாக்கி விடுவார்கள். அந்த அடிப்படையில் தான் இன்று இஸ் லாம் கூறாத கருத்துக்களைக் கூறிக்கொண்டு அதிகமான கொள்கைகளும், தவறான கருத்துக்களும் மலிந்து காணப்படுகின்றன.

மேலும் பறகத் செய்யப்பட்டதெனக் கூறப்படும் அனைத்துப் பொருட்களும் ஏனையவைகளுக்கு பறகத் செய்யப்படுவதற்கு காரணமாக இருக்கும் எனக்கூறுபவன் தான் கூறும் கருத் துக்கு குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஆதாரம் முன்வைக் கப்பட வேண்டும். ஏனெனில் மார்க்க விஷயங்களைப் பொறுத்த வரையில் அது எதுவாக இருந்தபோதும் அது தன்னாலேயே உருவாக முடியாது. மாற்றமாக அதனை அல்லாஹ்வோ, அல் லது அவனது தூதரோதான் குறிப்பிட்டுக் கூறியிருக்க வேண் டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

இந்த மனித சமுதாயத்துக்கு வழிகாட்டியாக வந்த இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் அனைத்து வழிமுறை களையும் இஸ்லாம் நமக்கு மார்க்கமாக்கியிருக்கின்றதா? என் பதையும் நாம் இவ்விடத்தில் தெரிந்து கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். அதனடிப்படையில் அவர்கள் வாழ்ந்து விட்டுச் சென்ற அந்தக் காலங்களில் அவர்கள் கடைபிடித்து வந்த வழிமுறைகளை பல வகையாகப் பிரிக்கலாம். அவை கள் பின்வருமாறு:

- உண்ணல், பருகல், அணிதல் போன்ற அவர்கள் வழமை அடிப்படையில் செய்து வந்தவைகள்.

- உறங்குதல், மலசலம் கழித்தல் போன்ற இயற்கையின் அடிப்படையில் செய்து வந்தவைகள்.
- தொடர் நோன்பு பிடித்தல் போன்ற தனக்கு மாத்திரம் சொந் தமானவையென நபியவர்கள் செய்து வந்தவைகள்.
- நீங்கள் தொழுகையை நிலைநாட்டுங்கள் என அல்லாஹ் கூறியதற்கினங்க தொழுது காட்டியமை, ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள் என கூறியதற்கினங்க அதன் விதி முறைகளைத் தெளிவுபடுத்தியமை போன்ற அவர்கள் குர் ஆனுக்கு விளக்கமளிக்கும் வகையில் செய்துவந்தவைகள்.
- திருடியவனின் கையை வெட்டுதல், திருமணம் முடித்து விபச்சாரம் செய்தவனை கல்லெறிந்து கொள்ளுதல், நோன்பு காலத்தின் பகல் காலங்களில் உடலுறவில் ஈடுபட்டவனுக் குரிய சட்டத்தை நிறைவேற்றுதல் போன்ற மார்க்கமாக்கப் பட்ட கடமைகள் என்ற அடிப்படையில் செய்து வந்தவைகள்.

மேற்கூறப்பட்டவைகளில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது போன்ற பகுதிகளைப் பின்பற்றி நடந்தாலும் அவை கள் அல்லாஹ்விடத்தில் வணக்கமாகக் கருதப்பட்டு நன்மைகள் கொடுக்கப்பட மாட்டாது. நான்காவது பகுதியைப் பொறுத்த வரையில் குர்ஆன் கூறும் அவ்வணக்கத்திற்கு இஸ்லாம் அதற்கு எச்சட்டத்தைக் கொடுக்கின்றதோ அதுதான் அதை செய்வதற்குரிய சட்டமுமாகும். அவ்வணக்கம் கடமையென்றி ருந்தால் அதைச்செய்வது கடமையாகும். அதைச்செய்வது சுன்னத்தென்றிருந்தால் அதைச்செய்வது சுன்னத்தாகும். ஐந்தா வது பகுதியைப் பொறுத்தவரையில் மார்க்கம் அதற்கு கடமை, சுன்னத், ஹராம், மக்ரூஹ், ஆகுமானது என்பது போன்ற சட் டங்களில் எதனை அதற்குரிய சட்டமாக விதித்திருக்கின்றதோ அதுதான் அதற்குரிய சட்டமாகும்.

மேலும் நபி (ஸல்) அவர்களது வழிமுறைகள் காலத்துடனோ, நேரத்துடனோ தொடர்புற்றிருந்தால் அதற்கும் இரு நிபந்தனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு:

- அவர்கள் செய்து வந்த அச்செயல் ஹதீஸில் பதிவாகியிருத்தல் வேண்டும்.
- அச்செயலை நபி (ஸல்) அவர்களே செய்திருக்கின்றார்கள் எனவும் பதிவாகியிருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட இரு நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தால் அச்செயலுக்கேற்ப கடமையென்றோ, அல்லது சுன்னத்தென்றோ சட்டம் வகுக்கப்படும். மாற்றமாக மேற்கூறப்பட்ட நிபந்தனைகளில் ஒன்றோ, அல்லது இரண்டுமோ இல்லாதிருந தால் அதனை மாக்கத்திலுள்ளதாகக் கருதப்படமாட்டாது. இதனடிப்படையில் தான் மார்க்க அறிஞர்கள் நபி (ஸல்) அவர்கள் மிஹ்சப் என்ற இடத்தில் உட்கார்ந்ததையிட்டு பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். யார் நபியவர்கள் அவ்வாறு உட்கார்ந்ததை மார்க்க அடிப்படையில்தான் உட்கார்ந்தார்கள் எனக்கருதினார்களோ அவர்கள் அதனை சுன்னத் என்றும், அவ்வாறல்ல அவர்கள் அவ்விடத்தில் களைப்பாறும் நோக்கில் தான், அல்லது எதேச்சையாகத்தான் உட்கார்ந்தார்கள் எனக் கருதியவர்கள் அவ்வாறு உட்கார்வதை ஆகுமானது அதனைச் செய்தால் நன்மையுமில்லை விட்டால் குற்றமுமில்லை எனமார்க்கத்தீர்ப்பு வழங்கியிருக்கின்றார்கள்.

மேற்கூறப்பட்டதின் பிரகாரம் நபி (ஸல்) அவர்கள் உட்கார்ந்த அனைத்து இடத்தில் உட்காருவதையும், அவர்கள் சென்ற அனைத்து இடத்துக்குச் செல்வதையும் ஹதீஸில் ஆதாரம் இருந்தாலேதவிர அதனை நபிவழி முறையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அதே போன்றுதான் நபி(ஸல்)அவர்கள் பிரயோகித்த இடங்களுக்கு என்ன சட்டம் வழங்கப்பட்டிருக்

கின்றதோ அதே சட்டம்தான் அவர்கள் பிரயோகித்த கால நேரத் துக்கும் வழங்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்டவாறு ஒரு சட்டம் இஸ்லாத்தில் இருக்கின் றது என்பதை அறியாது நபி (ஸல்) அவர்கள் உட்கார்ந்த இடங்களைத் தேடிச்சென்று உட்கார்ந்தும், அவர்கள் மலசலம் கழித்த இடங்களைத் தேடிச்சென்று அவ்விடங்களில் மலசலம் கழித்தும் வந்த இப்னு உமர் (ரலி) அவர்களை ஏனைய நபித் தோழர்கள் நிராகரித்து அவ்வாறு செய்வது நபிவழி முறைமி லுள்ளதல்ல என்பதையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்கள்.

எனவே இப்னு உமர் (ரலி) அவர்கள் அன்று அறியாமல் செய்துவந்ததை ஆதாரமாக எடுத்துக்கொண்டு நாம் எவரும் அவ்வாறு செய்யக்கூடாது. ஏனெனில் அவர்கள் செய்ததெல்லாம் ஒருவேளை அவைகள் நபிவழிமுறையாக இருக்கலாம் என்ற எண்ணத்திலாகும். எப்போது அவை நபிவழிமுறையல்லவென அறிந்து கொண்டார்களோ அப்போதே அதனைத் தவிர்ந்து கொண்டார்கள்.

இதேபோன்றுதான் ஹுதைபியா உடன்படிக்கையின்போது நபியவர்கள் உட்கார்ந்திருந்த மரத்தடியில் உட்காருவதும், அற பாவில் உள்ள கல்லுக்குப் பக்கத்தில் உட்காருவதும், அவர்கள் பிரயாணம் மேற்கொள்ளும்போது உட்கார்ந்த இடங்களில் உட் காருவதும் நபிவழிமுறையாக கணிக்கப்படமாட்டாது. அதற்கு ஆதாரமாக நபி (ஸல்) அவர்கள் அறபாவில் அக்கல்லுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தவாறு கூறியதையே ஆதாரமாகக் கொள்ள லாம். அதாவது அவர்கள் அக்கல்லுக்குப் பக்கத்தில் உட்கார்ந் தவாறு கூறுகையில், நான் இந்த இடத்தில் உற்கார்ந்திருக்கின் றேன். ஆனால் இது மாத்திரமல்ல அறபாவில் தரிப்பதற்குரிய இடம். மாற்றமாக அறபாவிலுள்ள எல்லா இடங்களும் தரிப்பதற் குரிய இடங்களாகும் எனக்கூறினார்கள். எனவே அவர்கள் உட் கார்ந்த இடத்தில் மாத்திரமல்லாது ஏனைய இடங்களில் உட் காருவது மூலமும் நாம் அறபாவில் தங்கியவர்களாகக் கரு தப்படுகின்றோம். ஆக நபித்துவம் கொடுக்கப்பட்டபின்பு இவ்வா

றான சட்டதிட்டங்கள் இருக்கும்போது நபியைப் பின்பற்றுகின்றோம். அவர்கள் கூறிச்சென்ற வழிமுறைகளையும், அவர்கள் வாழ்ந்து காட்டிவிட்டுச் சென்ற வழிமுறைகளையும் பின்பற்றுகின்றோம் எனக்கூறிக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்னுண்டான காலங்களில் அவர்கள் தங்கி வந்த ஹிராக் குகை, ஸவ்ர் குகை போன்றவைகளில் போய் தங்குவது எவ்வகையிலும் நபிவழியாக மாட்டாது.

**மனிதன், இடம், காலம் போன்றவற்றை கண்ணியப்படுத்தல்.**

நாம் மனிதர்களையும், இடங்களையும், காலங்களையும் கண்ணியப்படுத்துகின்றோம் என்ற வார்த்தையைக் கூறும்போது, நமக்கு அவைகளை எவ்வாறு கண்ணியப்படுத்தும்படி மார்க்கம் கட்டளையிட்டிருக்கின்றதோ அந்த வரையறையையும் மீறி கண்ணியப்படுத் தப்படுவதையே குறிப்பிடப்படுகின்றது. எனவே வரம்பு மீறி ஒருவரை கண்ணியப்படுத்துவதென்றால் அல்லாஹ்வை மாத்திரம்தான் அவ்வாறு கண்ணியப்படுத்த வேண்டும். ஏனெனில் அவனை அவ்வாறு கண்ணியப்படுத்தக் கூடியவாறு அவனது பெயர், பண்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன(7.180).

மேலும் அல்லாஹுத்தஆலா இவ்வுலகில் நடை முறைப் படுத்தக்கூடிய அவனது அனைத்து செயற்பாடுகளும் ஏதோவொரு காரணத்தை முன்வைத்தே இருந்து கொண்டிருக்கும் என்பதையும் பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். தான் நாடியதையெல்லாம் மிகுதியாகச் செய்யக் கூடியவன்(86.16).

மேலும் அவன் இந்த மனித சமுதாயத்தின்மீது விதிக்கின்ற மார்க்கத் தீர்ப்புகளும் நியாயமானதாகவே இருக்கும். அதனைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான். உறுதியாக நம்பிக்கை கொண்ட சமூகத்தார்க்குத் தீர்ப்பளிப்பதில் அல்லாஹ்வை விடவும் மிக்க அழகானவன் யார்?(5.50).

மேலும் அவன் அவனது அடியார்கள்மீது அளவு கடந்து அருள்பாலித்திருக்கின்றான் என்பதையும் இவ்வாறு கூறிக் காட்டுகின்றான். ஆகவே அல்லாஹ்வுடைய அருட்கொடைகளை நீங்கள் எண்ணுவீர்களாயின் அவற்றை நீங்கள் கணக்கிட்டு(எண்ணி வரையறுத்து)விடமாட்டீர்கள்(14,34).

எனவே நம்மை இப்பூவுலகில் படைத்தது மட்டுமின்றி நமக்கு அளவில்லா அருட் கொடைகளையும் அருளியிருக்கும் அல்லாஹ்தான் மிகமிக கண்ணியப்படுத்தப்பட வேண்டியவனும், புகழப்பட வேண்டியவனும் என்பதனை மேற்கூறப்பட்ட திரு வசனங்கள் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அதேநேரம் அல்லாஹ்வைத் தவிர்ந்த ஏனைய அவனது படைப்பினங்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் எந்தளவு கண்ணியமும், மதிப்பும் இருக்கின்றதோ அதன்பிரகாரமும், அத்துடன் இஸ்லாம் அவர்களை எவ்வாறு கண்ணியப்படுத் தும்படிக் கூறிக்கொண்டிருக்கின்றதோ அதன்பிரகாரமும் தான் அவர்களை கண்ணியப்படுத்த வேண்டும். மாற்றமாக அவன் இட்ட வரம்புகளைத் தாண்டி நாம் அவர்களை கண்ணியப் படுத்தும்போது அதனை இஸ்லாம் ஹராமெனக்கூறி அவைகளைச் செய்ய வேண்டாம் என தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கின்றது.

மனிதர்களை எவ்வாறு கண்ணியப்படுத்தும்படி மார்க்கம் நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றதோ அதன் பிரகாரம்தான் நாம் அவர்களை கண்ணியப் படுத்துவதுடன், அவர்களை சேர்ந்து நடந்து நேசம் கொள்ளவும் வேண்டும். அவ்வாறு அவர்களை நேசம் கொண்டு கண்ணியப் படுத்துவதை இருவகைப் படுத்தலாம். அவைகள் பின்வருமாறு:

- மார்க்கம் அனுமதித்தவாறு அவர்களை கண்ணியப் படுத்துதல்.

- மார்க்கம் அனுமதிக்காத வகையில் தனது மனோ இச்சைக் கேற்ப சாதாரண மனிதர்களை அவர்களுக்கிருக்கும் அந் தஸ்தை விடவும் அவர்களை உயர்வாய் மதித்தல்.

மேற்கூறப்பட்ட இருபகுதிகளில் இரண்டாம் பகுதியைப் பொறுத்தவரையில் அது அல்லாஹ்வுக்கு மாத்திரமே பொருத்த மானதென்பதை நாம் முன்பு கூறியிருக்கின்றோம்.

மேலும் இடங்களையும், நேரங்களையும் பொறுத்தவரை யில் இஸ்லாம் எவ்விடங்களையும், எக்காலங்களையும் கண் ணியப்படுத்துவதற்கு அனுமதியளித்திருக்கின்றதோ அவ்விடங் களையும், அக்காலங்களையும் மாத்திரமே நாம் கண்ணியப் படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போதுதான் நாம் செய் யும் வணக்கம் அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட ஒரு வணக்கமாக அமையப் பெறுகின்றது. எனவே ஹஜ் கட மையை நிறைவேற்றச் செல்லும் ஒருவர் அல்லாஹ்வின் கட் டளையின் பிரகாரம் க.:.பாவை வலம் வருதல், ஸபா, மர்வா மலைக்கிடையில் ஓடுதல், ஒன்பதாம் நாள் அறபா மலையில் தரித்தல், மேலும் நபி (ஸல்) அவர்களின் மதீனாப்பள்ளியை தரிசிக்கச் செல்லல், மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளியை தரிசிக்கச் செல்லல் போன்றவைகள் இடம் சம்பந்தப்பட்ட வணக்கங்க ளாக கருதப்படுகின்றன. அத்துடன் நாம் அவைகளை வணக் கமாக நினைத்துச் செய்யும்போது அல்லாஹ் அவைகளுக்கு கூலியாகத் தருவதாகக்கூறிய நன்மைகளையும் நம்மால் பெற் றுக் கொள்ள முடிகின்றது.

அதேபோன்றுதான் ஹஜ்ஜுடைய நாட்கள், தஷ்ரீக்குடைய நாட்களான ஹஜ் மாதத்திலுள்ள 11,12,13 ஆம் நாட்கள், நோன்பு நாட்கள், ஒவ்வொரு வாரத்திலும் திங்கள், வியாழன் போன்ற நாட்கள், இரு பெருநாட்கள், ஜும்ஆவுடைய நாள், சூரிய, சந்திர கிரகணம், மழைதேடித் தொழுவதற்கு ஒன்றுகூடல் போன்றவைகள் காலம் சம்பந்தப்பட்ட வணக்கங்களாக இருப்ப துடன் அல்லாஹ்வும் அவைகளை கண்ணியப்படுத்திக் கூறி

யுள்ளான். எனவே அல்லாஹ்வும், அவனது தூதரும் எவைக ளையெல்லாம் கண்ணியப்படுத்தி நம்மையும் கண்ணியப்படுத் துமாறு பணித்திருக்கின்றார்களோ அவைகள் அனைத்தும் வணக்கங்களாகும். அவ்வணக்கங்களில் நாம் ஈடுபடும்போது அல்லாஹ்வும், அவனது தூதரும் இட்ட வரம்புக்குற்பட்டே செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அது வணக்கமாகக் கருதப்படுகின்றது. மேலும் நாம் எவைகளையெல்லாம் வணக் கம் என்ற அடிப்படையில் செயல்படுத்த முனைகின்றோமோ அவை அனைத்துக்கும் குர்ஆன், ஹதீஸில் ஆதாரம் இருக்க வேண்டும் என்பதனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பாக இன்று சில மனிதர்கள் செய்துவரும் கப்று வணக்கம், நபி (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தில் கொண்டா டப்படும் மௌலீத்து, மிஃராஜ் இரவு போன்றவைகளைக் கொண்டாடுவதற்கு இஸ்லாத்தில் அனுமதியிருக்கின்றதா? எனப் பார்த்தால், அவைகளை இஸ்லாம் வணக்கமாகவோ, அல்லது அவைகளில் ஈடுபடுவோருக்கு நன்மைகள் இருப்பதாகவோ கூறவில்லை. மாற்றமாக மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்கியிருக்கின்றான் என்ற குற்றத்துக்குத்தான் ஆளாகி விடுகின்றான். ஆதலால் மேற்கூறப்பட்ட விழாக்களை கொண்டா டுவதோ, அல்லது அவைகளுக்கு துணை போவதோ வெறுக் கப்பட்ட ஒன்றாகும்.

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு புதிதாக உரு வாக்கப் பட்டவைகளைப்பற்றிக் கூறுகையில், இஸ்லாத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவைகள் அனைத்தும் வழிகேடுகளா கும் எனக் கூறுகின்றார்கள். மேற்கூறப்பட்ட விழாக்களைக் கொண்டாடுவது கூடும் என்றிருந்தால் அல்லாஹ்வும் அவனது தூதரும் அவைகளை மார்க்கமாக்கியிருப்பதுடன் நபியவர்க ளது தோழர்களும், அவர்களைப் பின்தொடர்ந்தோரும் அவை களை சிரமேற்கொண்டு செயல்படுத்தியுமிருப்பார்கள். ஆனால் அவைகளைப்பற்றி அல்லாஹ்வோ, அவனது தூதரோ கூறியில் லாததாலும், நபியவர்களது தோழர்களின் வாழ்க்கையில் அவ்வா

றானதோர் வணக்கம் காணப்படாததாலும் அவை இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வணக்கமல்ல என்பது தெளிவாகின்றது.

எனவே அவ்வாறான விழாக்களைக் கொண்டாடுவதற்கு மார்க்கத்தில் இடம் இருக்கின்றது எனக்கூறி அவைகளை நாம் கண்மூடித்தனமாக செய்ய முற்படக்கூடாது. ஏனெனில் நபி (ஸல்) அவர்களது மரணத்துடனே இஸ்லாம் பூரணமாக்கப்பட்டதுடன் நல்லவை, தீயவை என அனைத்தும் விரிவாகவும், விளக்கமாகவும் அறிவிக்கப்பட்டு விட்டது. அல்லாஹ் கூறுகின்றான். இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி முழுமையுமாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன்(5.3).

மேலும் அல்லாஹ் வணக்கவழிபாடுகளில் ஈடுபடுவதற்குரிய நாட்கள்தான் என சில நாட்களைக் குறிப்பிட்டுக் கூறியிருந்தாலும் அந்நாட்களில் அவன் எதைச் செய்ய வேண்டும் எனக் கூறியிருக்கின்றானோ அதனை மாத்திரமே செய்ய வேண்டும். மாற்றமாக அந்நாட்களில் அவன் அனுமதிக்காதவைகளைச் செய்வதற்கு இஸ்லாத்தில் எவ்வித சலுகையும் கிடையாது. ஓரிடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், ஜும்ஆவுடைய தினத்தை குறிப்பான தொழுகைகளைத் தொழக்கூடிய நாளாகவோ, அதனது பகல் பொழுதுகளை குறிப்பான நோன்புகளை நோக்கக்கூடிய பொழுதுகளாகவோ நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள் எனக்கூறியிருக்கின்றார்கள்.

எனவே குறிப்பிட்ட சில காலங்களையும், இடங்களையும் வணக்க வழிபாடுகளுக்குரிய காலநேரங்களாக எடுத்து அவைகளை வருடந்தோரும் கொண்டாடக் கூடியவர்களாக இருப்போமேயானால், மார்க்கத்தில் இல்லாத ஒன்றை நாம் மார்க்கமாக்கிக் கொண்டோம் என்ற குற்றத்துக்கு ஆளாகின்றோம்.

மேலும் மாற்று மதத்தவர்கள் கொண்டாடும் பண்டிகை நாட்களில், அல்லது அவர்களது விஷேஷங்கள் நடத்தப்படக் கூடிய இடங்களில், அல்லது அவர்களது சிறப்பு ஏற்பாடுகள்

நடக்கக்கூடிய கூட்டங்களில் அவர்களுடன் சேர்ந்து நாமும் நமது வணக்கங்களை செய்து வருவதை இஸ்லாம் ஹறாமாக் கியிருக்கின்றது. ஏனெனில் அவ்வாறு அவர்கள் அவர்களது விழாக்களை கொண்டாடும் காலங்களில் நாமும் அவர்களுடன் இணைந்து நமது விழாக்களைக் கொண்டாடும் போது நம் மையறியாமலே அவர்களுடைய சந்தோஷத்துடனும், கலாச்சாரங் களுடனும் கலந்து அவர்களைப் போன்று மாறி விடுகின்றோம்.

அவ்வாறு நடந்து கொள்வதனை நபி (ஸல்) அவர்கள் கண்டித்துக் கூறுகையில், யார் எக்கூட்டத்துக்கு ஒப்பாகின் றானோ அவன் அக்கூட்டத்தைச் சார்ந்தவனாவான். எனக்கூறி யிருக்கின்றார்கள். இதனை உறுதிப்படுத்தும் வகையில் வேறொரு அறிவிப்பில் பின்வருமாறு இடம்பெற்றிருக்கின்றது. அதாவது ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் நான் அல்லாஹ்வுக்குச் செய்த எனது நேர்ச்சையை நிறைவேற்றுவதற்கு எண்ணம் கொண்டுள்ளேன் எனக்கூறினார். அதைச் செவியுற்ற நபியவர்கள் அவரைப் பார்த்து, நீங்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் சிலை களோ, அல்லது அந்த இடம் (யூத, கிரிஸ்தவர்களது அல்லது முஷ்ரிகீன்களது) விழாக்கள் கொண்டாடப்படும் இடமாகவோ இருக்கின்றதா? என வினவினார்கள். அதற்கவர் அது அப்படி யானதோர் இடமல்ல என்று கூறியதன் பின்பு தான் அவ்விடத் தில் அவரது நேர்ச்சையை நிறைவேற்றும்படி பணித்தார்கள்.

ஆனால் அவர் அவரது நேர்ச்சையை நிறைவேற்றப் போகும் இடம் மாற்று மதத்தவர்கள், அவர்களது வணக்கங் களை நிறைவேற்றும் இடமாக, அல்லது அவர்கள் விழாக் கொண்டாடும் இடமாக, அல்லது அவர்கள் அவர்களது விஷே ஷங்களில் ஒன்றுகூடும் இடமாக இருந்திருந்தால், நபியவர்கள் அந்நேர்ச்சையை அவ்விடத்தில் நிறைவேற்றும்படி பணித்தி ருக்க மாட்டார்கள் என்பது தெளிவாகின்றது. ஏனெனில் அவர் கள் அவர்களது வணக்கங்களை செய்யும் இடங்களில் நாமும் நமது வணக்கங்களைச் செய்யும்போது, நம்மையறியாமலே

அவர்களுடைய சந்தோஷத்திலும், கலாச்சாரங்களிலும் கலந்து அவர்களைப் போன்று மாறி அவர்களுக்கு ஒப்பாகி விடுகின்றோம். அவ்வாறு ஒப்பாகுவதை இஸ்லாம் ஹராம் எனக்கூறிக் கொண்டிருப்பதை மேலே கூறப்பட்ட ஹதீஸ் விளக்கிக் கொண்டிருக்கின்றது. அதேபோன்றுதான் முஹர்ரம் மாதத்தில் ஒன்பதாவது நாளில் மாத்திரம் நாம் நோன்பு வைப்பதால் யூதர்களுக்கு ஒப்பாகி விடுகின்றோம் என்ற ஒரே காரணத்தினால் அதனுடன் சேர்த்து பத்தாம் நாளிலும் நோன்பு வைத்து அவர்களுக்கு மாற்றம் செய்யுமாறு நமக்கு இஸ்லாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. இதுபோன்ற இன்னும் பல ஆதாரங்களும் அந்த யூத, கிரிஸ்தவர்களுக்கு ஒப்பாகக்கூடாது என்பதைத்தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றது.

**சிலை வணக்கமும், வீட்டில் உருவப்படங்களை தொங்க விடுவதும்.**

பொதுவாக உயிருள்ள ஜீவராசிகள் எதுவாயிருந்தாலும் அவைகளை உருவம் செய்து, அல்லது புகைப்படம் பிடித்து அவைகளை வணங்கி வருவதும், அல்லது அழகுக்காகவும், ஞாபகார்த்தத்திற்காகவும் நமது வீடுகளில், அல்லது குடியிருக்கும் இடங்களில் தொங்கவிடுவதும் இஸ்லாம் தடைசெய்தவைகளில் உள்ளதாகும். மேற்கூறப்பட்டவைகளில் ஈடுபடுவது கூடாதென்றும், அவ்வாறு சிலை வடிப்பவர்களையும், புகைப்படம் பிடிப்பவர்களையும் சபித்தும் ஏராளமான நபிமொழிகள் வந்திருக்கின்றன. அவ்வாறு கூறப்பட்டு வந்த நபிமொழிகளில் சிலதைப் பார்ப்போம்.

அல்லாஹ் அறிவித்ததாக நபி (ஸல்) அவர்கள் கூறியதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நான் படைத்தவைகளைப் போன்று படைக்க முயற்சிப்பவனைவிட மிகப் பெரிய அநியாயக்காரன் யார் இருக்கின்றான்? என்னோடு போட்டியிட அவர்களுக்கு முடியுமென்றால் ஒரு வித்தையோ, அல்லது ஒரு விதையையோ, அல்லது ஒரு கோதுமை மணியையோ

படைத்துக் காட்டட்டும் எனக்கூறுவதாகக் கூறுகின்றார்கள் (புகாரி,முஸ்லிம்).

மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நாளை மறுமையில் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவோர் யாரெனில், அல்லாஹ்வின் படைப்புகளைப்போன்று படைக்க முயல்பவர்களேயாகும் எனக் கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்). மேலும் நபியவர்கள் நவின்றதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், சிலை வடிப்பவர்கள் (புகைப்படம் பிடிப்பவர்கள்) அனைவரும் நரகத்தையே சென்றடைவதுடன், நாளை மறுமையில் அவர்கள் உலகில் செய்த சிலைகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு அச்சிலைகளின் மூலமாக நரகிலே வேதனை செய்யப்படுவார்கள் எனக் கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

வேறோர் இடத்தில் கூறுகையில், யார் உலகிலே சிலை வடிக்கின்றானோ(புகைப்படம் பிடிக்கின்றானோ) மறுமையில் அவன் செய்த அச்சிலைக்கு உயிர் கொடுக்கும்படி அவனுக்கு ஏவப்படும். ஆனால் அவனால் அதற்கு உயிர் கொடுக்க முடியாதவனாயிருப்பான் எனக்கூறுகின்றார்கள்(புகாரி,முஸ்லிம்). மேலும் அபுல் ஹய்யாஜ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், அலி (ரலி) அவர்கள் என்னை ஓரிடத்துக்கு அனுப்பும்போது பின்வருமாறு கூறியனுப்பினார்கள், நபி (ஸல்) அவர்கள் எனக்கு எதைக் கூறியனுப்பினார்களோ அதையே உனக்கும் கூறியனுப்புகின்றேன் எனக்கூறிவிட்டு பின்வருமாறு கூறுகின்றார்கள். நீ செல்லக் கூடிய ஊரில் காணக்கூடிய அனைத்துச் சிலைகளையும் உடைத்து விடுவதுடன், உயர்த்திக் கட்டப்பட்டிருக்கும் அனைத்துக் கப்றுகளையும் தரைமட்டமாக்கியும் விடுவாயாக! எனக்கூறினார்கள்(புகாரி,முஸ்லிம்).

மேற்கூறப்பட்ட நபிமொழிகளைக் கவனிக்கும்போது அவைகளில் பல விஷயங்கள் வலியுறுத்தப் பட்டிருப்பதைக் காணுகின்றோம். அவ்வாறு வலியுறுத்தப் பட்டிருப்பவைகளில் சிலதை

அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இங்கே குறிப்பிடுகின்றோம்.

- சிலை வடிப்(புகைப்படம் பிடி)ப்பது ஹராமாகும்.
- சிலை வடிப்பவர்(புகைப்படம் பிடிப்பவர்)களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.
- சிலை வடிப்(புகைப்படம் பிடிப்)பதை ஹராமாக்கப்பட்ட தற்குரிய முக்கிய காரணம் அல்லாஹ் படைத்த படைப்பு களைப் போன்று மனிதர்கள் படைக்க முற்படுவதினாலாகும். மற்றுமொரு காரணமும் இருக்கின்றது. அதாவது அவ் வாறு சிலை (புகைப்படங்)கள் செய்யப்படும் போதுதான் அல்லாஹ்வை விடுத்து அச்சிலைகளை வணங்குவதற்கு ஷைத்தான் வழிவகுக்கின்றான். அதற்கு ஆதாரமாக நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் நடந்த சிலை வடிப்பு களையும், அதன்பின் அச்சிலைகளை அவர்கள் வணங்க தலைப்பட்டதையும், அன்றிலிருந்து தொடர்ந்த சிலை வணக்கம் உலகில் இன்று வரையும் காணப்பட்டுக் கொண்டிருப்பதையும் குறிப்பிடலாம்.
- சிலை என்ற வார்த்தையில் சிலை வடித்தல், படம் வரை தல், புகைப்படம் பிடித்தல்போன்ற அனைத்தும் அடங்கி விடுகின்றது. மேலும் நாம் வடிக்கும் சிலை உருவமுள்ள தாக அல்லது உருவமற்று வேறுவிதத்தில் இருந்தாலும் அது சிலை என்ற வட்டத்துக்குள்ளேயே கணிக்கப் படுகின்றது.

மேற்கூறப்பட்டவையின்றி கட்டாயம் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையிலிருக்கும் கடவுச்சீட்(பாஸ்போட்)டுக்குரிய, அல்லது அறிமுக அட்டைக்குரிய புகைப் படங்களைப் பிடிப்ப தற்கு இஸ்லாம் அனுமதியளித்திருக்கின்றது. கடுங் கஷ்டத்தில் உள்ளவனுக்கு செத்த பிராணிகளின் மாமிசத்தை உட்கொள்வ தற்கு இஸ்லாம் எவ்வாறு அனுமதியளித்திருக்கின்றதோ அதே

போன்று மனிதனுடைய அவசியத் தேவைகள் எனக்கருதப்படக் கூடியவைகளுக்கு புகைப்படம் பிடித்துக் கொள்வதையும் அனுமதித்திருக்கின்றது.

அதற்கு மாறாக எவ்விதத் தேவையுமின்றி வீணாக புகைப் படம் பிடிக்கும் போதுதான் பல பிரச்சினைகள் மனிதனுக்கு உருவாகின்றது. அவ்வாறு மனிதன் எதிர்நோக்கக்கூடிய பிரச்சி னைகளில் மிகவும் முக்கியமாகக் கருதப்படக் கூடியவைகளில் ஒன்றுதான் சூனியக்காரர்கள் அப்புகைப்படங்களை வைத்து இணைய விரும்பாத இரு உள்ளங்களை இணைத்து வைக் கின்றார்கள். மேலும் சிலர் அப்புகைப்படங்களை பத்திரிகைக ளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரித்து அப்புகைப்படங்களுக் குரியவர்களை மானபங்கப் படுத்துகின்றார்கள்.

இவ்வாறெல்லாம் நடந்து கொண்டிருப்பதால் முஸ்லிமக ளாகிய நாம் புகைப்படம் பிடிப்பதின் விபரீதங்களை அறிந்து தவிர்ந்து கொள்வது நம் ஒவ்வொருவர் மீதும் அவசியமா கின்றது. புகைப்படம் பிடித்து அப்புகைப்படங்கள் மூலமாகத் தான் நமது சரியான கொள்கையை பரப்பலாம் எனக்கூறிக் கொண்டு புகைப்படம் பிடிப்பதில் ஈடுபடக்கூடாது. ஏனெனில் நாம் எதனைச் செய்வதாக இருந்தாலும் இஸ்லாம் அனுமதித்த வழிமுறைகளினூடாகச் சென்றுதான் நமது கடமைகளைச் செய்ய வேண்டும். இஸ்லாம் அனுமதிக்காத வழிமுறைகளைப் பயன் படுத்தி நாம் எந்த நற்கிரியைகளில் ஈடுபட்டாலும் அவை ஹராமானதாகவே கருதப்படுகின்றது.

ஆனால் இன்று சிலர் நாம் புகைப்படம் பிடிப்பதால் ஒரு வருடைய நிழலைத்தான் பதியவைக்கின்றோமே தவிர வேறு எதனையும் அல்ல. எனவே அவ்வாறான முறையில் புகைப் படம் பிடிக்கலாம் என குதர்க்கவாதம் செய்து கொண்டிருப்ப தைப் பார்க்கின்றோம். அவ்வாறு அவர்கள் செய்யும் தவறுக்கு மற்றொரு தவறான காரணத்தைக் கூறிக்கொண்டு அவைகூடும் என்ற அடிப்படையில் செய்துவந்த போதிலும் அவர்கள் இஸ்

லாம் தடுத்த ஒன்றையே செய்து வருகின்றார்கள் என்பதனை யாராலும் மறுக்கமுடியாது.

**விழாக்கள், கொண்டாட்டங்கள், ஒன்றுகூடல்கள்.**

விழாக்கள், கொண்டாட்டங்கள் எனும்போது வாரத்தில் ஒருமுறையோ, அல்லது மாதத்தில் ஒரு முறையோ, அல்லது வருடத்தில் ஒருமுறையோ தொடராக கொண்டாடப்பட்டு வரும் ஒரு நிகழ்ச்சியையே குறிக்கின்றது. அதேபோன்று ஈதுல் பித்ர் ஈகைப் பெருநாள், வாரம் ஒருமுறை வரும் ஜும்ஆ வுடைய தினம் போன்றவைகளுக்கும், அந்நாட்களில் ஒன்று கூடுவதற்கும், மேலும் குறிப்பான இடங்கள், அல்லது பொது வான இடங்கள் போன்றவைகளில் கொண்டாடப்படும் நிகழ்ச்சிகளுக்கும் விழாக்கள் எனக்கூறலாம்.

காலத்தோடு சம்பந்தப்பட்ட விழாக்களையும், கொண்டாட் டங்களையும் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், ஜும் ஆத் தினத்தை முஸ்லீம்களுக்குரிய பெருநாளாக அல்லாஹ் ஆக்கியிருக்கின்றான் எனக்கூறுகின்றார்கள். மேலும் ஒரு விஷேஷத்தில் ஒன்று கூடுவதையும், நற்கிரியைகள் செய்வதை யும் பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகையில், நான் பெருநாள் தினத்தன்று நபி (ஸல்) அவர்களுடன் இருந்து கொண்டிருந்தேன் எனக்கூறுகின்றார்கள்.

இடத்தோடு சம்பந்தப்பட்ட விழாக்களையும், கொண்டாட் டங்களையும் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், எனது கப்றை விழாக் கொண்டாடப்படும் இடமாக எடுத்துக் கொள் ளாதீர்கள் எனக்கூறியிருக்கின்றார்கள். மேலும் சில சந்தர்ப்பங்க ளில் அந்த நாளுக்கும், அதிலே செய்யும் கிரியைகளுக்கும் கூறப்படும். அதனை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்கள். ஒருமுறை ஒரு பெருநாள் தினத் தன்று இரு சிறு பெண் குழந்தைகள் மேளம் கொட்டிக் கொண்டிருந்ததைக் கண்ட அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர் களை அவ்வாறு செய்ய வேண்டாம் எனத்தடுதார்கள். அதைக்

கண்ட நபியவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்துக் கூறுகையில், அபூபக்ரே! அவ்விருவரையும் விட்டுவிடுவீராக! ஏனெனில் ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் அவர்களுக்கென்று சந்தோஷமாய் இருக்கக்கூடிய பெருநாட்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதுதான் எங்களுக்குரிய பெருநாளாகும் எனக் கூறினார்கள்.

மேற்கூறப்பட்டவைகளின் பிரகாரம் பார்க்கும்போது இஸ்லாம் அனுமதிக்காத எந்த இடத்தையும், காலத்தையும், ஒன்று கூடலையும் நாம் வணக்கத்துக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது தெளிவாகின்றது. அவ்வாறு கொண்டாடும் கொண்டாட்டம் குறிப்பிட்ட வணக்கத்தையொட்டியோ, அல்லது ஒன்றுகூடலையொட்டியோ, அல்லது வழமை என்ற அடிப்படையிலோ இருந்தாலும் சரிதான் அவ்வாறு கொண்டாடுவது கூடாது. மேலும் அவ்வாறு கொண்டாடும் விழாக்கள், கொண்டாட்டங்கள் காபிர்களதும், அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்போர்களதும், யூதர்களதும், கிரிஸ்தவர்களதும் கொண்டாட்டங்களுக்கு ஒப்பானதாக இருக்குமேயானால் அவைகளைக் கொண்டாடுவது ஹராமாகும். அச்சட்டத்தையும்மீறி ஒருவன் அவைகளைக் கொண்டாடுவானேயானால் அவன் கடும் தண்டனைக் குரியதோர் குற்றத்தைச் செய்தவனாக கருதப்படுகின்றான். ஏனெனில் வெளிப்படையானவைகளில் அவர்களுக்கு ஒப்பாகும்போது நம்மையறியாமலே உள்ளத்தாலும் அவர்களுக்கு ஒப்பாக வழி வகுக்கின்றது.

இதனால்தான் ஒருமுறை ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து புவானா என்ற இடத்தில் தனது நேர்ச்சையை நிறைவேற்றட்டுமா? என வினவியபோது அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்போர் அவ்விடத்தில் விழா கொண்டாடுகின்றார்களா? என வினவினார்கள். அதற்கு இல்லை என பதில் கூறப்பட்ட பின்தான் அவ்விடத்தில் அவருடைய நேர்ச்சையை நிறைவேற்றுமாறு பணித்தார்கள். இந்த ஹதீஸினடிப்படையில் அந்த இடம் அவர்களது விழாக்கள் கொண்டாடப்படும் இட

மாக இருந்திருந்தால் அந்த நேர்ச்சை அல்லாஹ்வுக்கு நிறை வேற்றப்பட வேண்டிய கடமையான நேர்ச்சையாக இருந்த போதிலும் அவ்விடத்தில் நிறைவேற்ற அனுமதி வழங்கியிருக்க மாட்டார்கள். அவ்வாறில்லாமல் அவ்விடங்களில் நிறைவேற்ற லாம் என்றிருந்தால் நபி (ஸல்) அவர்கள் அதனை அவ்வளவு தெளிவாக விசாரித்திருக்க மாட்டார்கள். அப்படி அவர்கள் விசாரித்ததற்குக் காரணமே அவர்களுடைய விழாக்கள், ஒன்று கூடல்கள் நடை பெறும் இடங்களில் நமது வணக்கங்களைச் செய்யக் கூடாது என்பதை மக்களுக்குத் தெளிவு படுத்துவதற் காகும் என்பது புலனாகின்றது.

எனவே நாம் நமது பிறந்தநாள், அல்லது பிறரது பிறந்த நாள் போன்றவைகளைக் கொண்டாடும் போது யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஒப்பாகுகின்றோம் என்ற ஒரேகாரணத்துக் காக நாம் நபி (ஸல்) அவர்களதோ, அல்லது ஈஸா (அலை) அவர்களதோ, அல்லது வேறு எந்த மனிதரதோ பிறந்த நாளைக் கொண்டாடுவது ஹராமாகும். அதேபோன்று தான் ஒவ்வொரு வாரத்திலும், அல்லது மாதத்திலும், அல்லது வரு டத்திலும் கொண்டாடப்படும் அனைத்து விழாக்களும், ஒன்று கூடலும் இஸ்லாத்தின் சட்ட, திட்டத்திற்கு உற்பட்டதாக இல் லாமலிருந்தால் அவை அனைத்தையும் கொண்டாடுவது ஹராமாகும்.

மேலும் புதுவருடம், நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தை மேற்கொண்ட நாள், மிஃராஜ் தினம், ஷஃபான் மாதத்து பதினைந்தாம்நாள் இரவு, அதேபோன்று சுதந்திர தினம், சிறுவர் தினம், காதலர் தினம் போன்ற அனைத்து ஒன்றுகூடல்களும், விழாக்களும் இஸ்லாத்தின் பார்வையில் ஹராமானதாகும். மேற் கூறப்பட்டவைகள் ஹராம்தான் என்பதற்கு ஆதாரமாக நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள். ஒருமுறை ஒரு பெருநாள் தினத்தன்று இரு பெண் குழந்தைகள் மேளம் கொட்டிக் கொண்டிருந்ததைக் கண்ட அபூபக்ர் (ரலி) அவர் கள் அவர்களை அவ்வாறு செய்ய வேண்டாம் என தடுத்தார்

கள். அதைக்கண்ட நபியவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்துக் கூறுகையில், அபூபக்ரே! அவ்விருவரையும் விளையாடுவதற்கு விட்டுவிடுவீராக! ஏனெனில் இந்த நாட்கள் பெருநாளுடைய நாட்களாகும். அவைகள் மினாவுடைய நாட்களாகும் எனக்கூறினார்கள். வேறொரு அறிவிப்பில் இது தான் நமக்குரிய பெருநாளாகும் என்றும், மற்றுமொரு அறிவிப்பில் இன்றைய தினம்தான் நமது பெருநாளாகும் என்றும் கூறியுள்ளார்கள். மேற்கூறப்பட்ட நபிவாக்கை எடுத்து நோக்கும் போது இரு விஷயங்கள் நமக்கு தெளிவாகின்றன. அவை பின்வருமாறு:

- ஒவ்வொரு கூட்டத்தினரும் சந்தோஷமாக இருக்கக் கூடிய பெருநாள் தினம் இருக்கின்றது. இதுதான் நமது பெருநாளாகும் எனக்கூறிய நபிகளாரின் கூற்றின் மூலம் ஒவ்வொரு மதத்தினருக்கும், அவர்களுக்கென்று பெருநாட்கள் இருக்கின்றன என்பது தெளிவாகின்றது. அல்லாஹ் கூறுகின்றான். (விசுவாசங் கொண்டோரே!) ஒவ்வொருவருக்கும் ஒரு திசையுண்டு. அ(வர)வர் அதன் பக்கம் திரும்புபவராக உள்ளார்(2:148). எனவே யூத, கிரிஸ்தவர்களுக்கும் சில பெருநாட்கள் அவர்களுக்குரியவாறு இருக்கின்றது. எனவே நாம் அவர்களது மார்க்கத்தை எவ்வாறு பின்பற்றாமல் இருக்கின்றோமோ அதேபோன்று அவர்களது அப்பெருநாட்களையும் கொண்டாடுவது கூடாது.
- இதுதான் நமக்குரிய பெருநாள் என்ற நபியவர்களின் கூற்றின் மூலம் இதைத்தவிரவுள்ள ஏனைய பெருநாட்கள் நமக்குரிய பெருநாள் இல்லையென்பதும், நபியவர்கள் குறிப்பிட்டவை மாத்திரம்தான் நமக்குரிய பெருநாட்கள் என்பதும் தெளிவாகின்றது.

மேற்கூறப்பட்ட யூத, கிரிஸ்தவர்களது விழாக்கள் நமது மார்க்கத்தில் உள்ளதுமல்ல. அவைகளை நாம் கொண்டாடவும் கூடாது என்பதை பின்வரும் நபிமொழியும் நமக்கு தெளிவு

படுத்துகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், யார் நமது இம்மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்கி அதுவும் மார்க் கத்திலுள்ளதுதான் எனக்கூறினால் அதனை மார்க்கத்திலுள்ள தாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனக்கூறினார்கள்.

மற்றுமொரு இடத்தில் கூறுகையில், மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவைகள் அனைத்தும் வழிகேடுகளாகும் எனக் கூறுகின்றார்கள். இவ்விரு ஹதீஸ்களின் பிரகாரம் மேற்கூறப் பட்ட விழாக்கள், கொண்டாட்டங்கள், ஒன்றுகூடல்கள் அனைத் துமே வழிகேடுகள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஆதலால் அவைகளில் கவனம் செலுத்துவதோ, அல்லது அவைகளைக் கொண்டாடுவதோ, அல்லது அவைகளைக் கொண்டாடுபவர்களுக்கு ஒத்தாசையாக இருப்பதோ ஹராமாகும்.

விழாக்கள், கொண்டாட்டங்கள், ஒன்று கூடல்கள் என்ற பெயரில் நாம் கொண்டாடக் கூடிய அனைத்து வணக்கங்களும் ஒன்றோ இடத்துடன், அல்லது காலத்துடன், அல்லது ஏதோ வொரு இடத்தில் ஒன்றுகூடுவதுடன் தொடர்புற்றிருப்பதைக் காணலாம்.

முதலாவது இடத்துடன் சம்பந்தப்பட்ட வணக்க வழிபாடு களைக் கொண்ட விழாக்களை மார்க்க அடிப்படையில் பார்க் கும்போது, அதனை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

- பாலைவனம், பொதுநிலம் மற்றும் ஏனைய நிலங்கள் போன்று மார்க்கத்தில் மதித்துக்கூறப்படாத இடங்கள். அவ்விடங்களைக் கொண்டாடப்படும் இடங்களாகவோ, அல்லது வணக்கங்களை நிறை வேற்றுவதற்குத் தகுந்த இடங்களாகவோ கருதி அவ்விடங்களுக்குச் சென்று வணக்கங்களைச் நிறைவேற்றக் கூடாது.

- நபி(ஸல்)அவர்களளும், ஏனைய இஸ்லாமியர்களும் அடக் கப்பட்டிருக்கும் கப்றுகள். நாம் அவ்விடங்களுக்குச் சென்று அக்கப்றுகளை தரிசித்து அவைகளில் அடக்கப்

பட்டிருப்பவர்களுக்கு பிரார்த்திப்பதற்கு மார்க்கத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், அவ்விடங்களில் சென்று இதர வணக்கங்களை செய்வது கூடாது.

- மார்க்கத்தில் அதனை வணக்கமாக கூறப்பட்டிருக்கும் ஆனால் அதனை தொடர் வணக்கமாக அமைத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக மதினாவிலிருக்கும் குபா பள்ளியில் தொழுவதற்கு இஸ்லாம் அனுமதித்திருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு வருடமும் அங்கு சென்று தொழுவதை வழக்கமாக்கிக் கொள்ளக்கூடாது. மேலும் ஷஃபான் மாதத்து பதினைந்தாம் இரவில் சிறப்பு இருக்கின்றது. ஆனால் அவ்விரவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடும் அளவுக்கு நாம் வழமையாக்கிக் கொள்ளக்கூடாது.

இரண்டாவது காலத்தோடு சம்பந்தப்பட்ட வணக்க வழிபாடுகளைக் கொண்ட விழாக்களை மார்க்க அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவைகள் பின்வருமாறு:

- மார்க்கம் அத்தினத்தைக் கண்ணியப்படுத்தியோ, அல்லது குறிப்பிட்டோ கூறியிருக்க மாட்டாது. அதற்குதாரணமாக: இன்று நம்மத்தியில் கொண்டாடப்படும் ரஜப் மாதத்து முதல் வியாழக்கிழமை, அன்றைய வெள்ளி இரவு போன்றவைகளைக் குறிப்பிடலாம்.
- முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்ற நாட்கள்.
- மார்க்கம் கண்ணியப்படுத்திய ஆசூரா தினம். அரபாவுடைய தினம். இரு பெருநாட்கள் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட இடம், காலம் சம்பந்தப்பட்டவைகளின் மூன்று பகுதிகளிலும் முதலாவது, இரண்டாவது பகுதிகளில் குறிப்பான எந்த வணக்கங்களையும் ஏற்படுத்தி அந்த இடங்களிலோ அல்லது அத்தினங்களிலோ செய்வது ஹராமாகும். அவைகளில் மூன்றாம் பகுதியைப் பொறுத்த வரையில் அந்த

இடங்களில் அல்லது அத்தினங்களில் வணக்கங்களில் ஈடுபட்ட போதிலும் அத்தினங்களில் குர்ஆன், ஹதீஸ் எதனை வணக்க மாகச் செய்யும்படி பணித்திருக்கின்றதோ அவ்வணக்கங்களை மாத்திரமே செய்ய வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட விழாக் கொண்டாட்டத் தோடு தொடர்புள்ள மற்றுமொரு விஷயத்தையும் ஞாபகப்படுத் துவது அவசியமாகும். அதாவது நம்மில் சிலர் பெருநாள் தினத்தன்று மையவாடிகளுக்குச் சென்று அவ்விடங்களில் கூட் டமாகக்கூடி, அங்கே அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்களுக்காக பிரார்த்தனை செய்து வருகின்ற ஒரு காட்சியைப் பார்க்கின் றோம். அதேபோன்று வேறு சிலர் மஸ்ஜிதுல் அக்ஸாவின் மூலம் பறகத் பெறலாம் எனக்கருதி அங்கே சென்று வருகின் றனர். இன்னும் சிலர் பரகத் பெறும் நோக்கில் அரபா மலையை வலம் வருகின்றனர். இவ்வாறானவைகளில் ஈடுபடுவது இஸ் லாம் அனுமதிக்காத வெறுக்கப்பட்ட பித்அத்துக்களாகும்.

ஒரு விஷேஷத்தை முன்னிட்டு ஒன்று கூடுவதையும் மார்க்க அடிப்படையில் அதனையும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள் பின்வருமாறு:

- பிறந்தநாள், புதுவருடம் கொண்டாடுவதற்கு ஒன்று கூடு வதைப்போன்ற மார்க்கத்தில் அனுமதிக்கப்படாதவை.
- தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்ற ஒன்று கூடுதல். இருபெருநாள் தொழுகைகளுக்கு ஒன்று கூடுதல் போன்ற மார்க்கம் அனுமதித்தவைகள்.
- மையவாடிகளிலும், வலிமார்களின் கப்றடிகளிலும் தொழு கையை நிறைவேற்ற ஒன்று கூடுதல். அவைகளில் அடக் கப்பட்டிருப்பவர்களிடம் பிரார்த்திக்க ஒன்று கூடுதல். அக் கப்றுகளை வலம்வர ஒன்றுகூடுதல் போன்ற மார்க்கத்தால் ஹராமாக்கப்பட்ட ஒன்று கூடல்களைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட மூன்றுவகை ஒன்றுகூடல்களிலும் முதலா வது, மூன்றாவது பகுதிகளைப் பொறுத்த வரையில் அவைக

ளுக்காக ஒன்றுகூடுவது ஹராமாகும். இரண்டாவது பகுதி மார்க்கம் அனுமதித்து ஒன்றுகூடித்தான் செய்ய வேண்டும் எனக்கூறிய வணக்கங்களிலுள்ளதாகும்.

எனவே ஒவ்வொரு முஸ்லிமும் தனது மார்க்கத்தின் தூய்மையைக் கெடுக்கக்கூடிய, அல்லது அதிலே மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து பித்அத்துக்களையும் தவிர்ந்து நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவைகள் அதிகரிக்கும்போது மார்க்கத்தின் தூய்மை மாறி விடுகின்றது. அத்தோடு புதிதாக உருவாக்கப் பட்ட அவ்விஷயங்களே படிக்காத பாமர மக்களால் பின்பற்றப் படக்கூடிய ஒன்றாகவும் ஆகிவிடுகின்றது.

மேலும் நமக்கு அருளப்பட்ட நமது இஸ்லாம் மார்க் கத்தை நமக்கு அருளப்பட்டவாறே தூயவடிவில் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமெனில் அதனை இரு வகையில் பாதுகாத் துக் கொள்ளலாம்.

- நமக்கு அருளப்பெற்ற இந்த மார்க்கத்தின் சட்ட, திட்டங் களைக் கற்றுக் கொள்வதுடன், மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்து, மனிதர்களுக்கிடையில் தெளிவாகவும், பகிரங் கமாகவும் இருக்கும் வகையில் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து பாதுகாத்து வருதல்.

- இஸ்லாத்தை மாசுபடுத்தக்கூடிய நிராகரிப்புகள், பித்அத்துக் கள், பாவங்கள் போன்றவற்றை அகற்றி அதனைத் தூய் மைப்படுத்திப் பாதுகாத்தல். ஏனெனில் இஸ்லாத்தின் எதிரி கள் எப்போதும் இஸ்லாத்தை பொதுமக்களுக்கு கொச் சைப் படுத்திக் காட்டி அதன்மூலம் சந்தோஷமடையத் துடிக்கின்றார்கள். அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வின் பிரகாசத்தைத் தம் வாய்களினால் (ஊதி) அணைத்துவிட அவர்கள் நாடுகின்றனர். அல்லாஹ்வோ தன்னுடைய பிரகா சத்தை பூர்த்தியாக ஆக்கி வைக்கக் கூடியவன்(61.8).

மேற்கூறப்பட்டவாறு இஸ்லாம் அனுமதிக்காத விழாக்க ளையும், கொண்டாட்டங்களையும், ஒன்று கூடல்களையும் கொண்டாடுவது பித்அத் என்பதால் அதனை இஸ்லாம் ஹறா மாக்கியிருக்கின்றது என்பதனை புரிந்து கொண்டோம். மேலும் இஸ்லாம் அனுமதிக்காத விழாக்களும், கொண்டாட்டங்களும், ஒன்றுகூடல்களும் அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்பதற்கும் உறு துணையாக இருக்கின்றது என்பதை கீழ்வரும் இருவிஷயங் கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

- இஸ்லாம் அனுமதிக்காத விழாக்களிலும், கொண்டாட்டங்க ளிலும், ஒன்றுகூடல்களிலும் நாமும் ஈடுபடும்போது வெளிப் படையில் அந்த இணை கற்பிப்பாளர்களுக்கு ஒப்பாகுவது டன் நமது உள்ளத்தின் ஈமானையும் பாதித்து விடுகின் றது. அத்துடன் அந்நிய மதத்தவர்களுடன் இணைந்து அவ்விழாக்களை நாம் கொண்டாடும்போது அவர்கள் செய்து வரும் சிலை வணக்கம், மரணித்தோரிடம் பிரார்த் தித்தல் போன்ற செயல்கள் அனைத்தும் சரியானதுதான் என்ற கருத்தையும் கொடுக்கின்றது. மேலும் அவ்விழாக் களை அவர்களுடன் இணைந்து கொண்டாடுவதால் நாளை மறுமையில் நாமும் அவர்களுடனேயே எழுப்பப்படு வோம் என்பதனை இஸ்லாம் நமக்கு எச்சரித்துக் கொண்டி ருக்கின்றது. ஓரிடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறுகை யில், யார் ஒரு கூட்டத்தினருக்கு ஒப்பாகின்றானோ அவன் அவர்களைச் சார்ந்தவனாகும் எனக்கூறுகின்றார்கள். இந்த நபிமொழி வெளிப்படையில் நாம் அவர்களுக்கு ஒப்பாகும் போது உள்ளத்தாலும் அவர்களுக்கு ஒப்பாகுவதற்கு வழி வகுக்கின்றது என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது.
- அவர்களுடன் இணைந்து நாமும் அவ்விழாக்களை கொண்டாடுவதால் நபியவர்களது வழிமுறையல்லாத பித் அத்தை செய்து வருவதுடன், அல்லாஹ்வின் வேதமல் லாத ஒன்றைக் கொண்டு தீர்ப்பு வழங்குகின்றோம் என்ற

கருத்தையும் கொடுக்கின்றது. எப்போது அல்லாஹ்வின் வேதமல்லாத ஒன்றைக் கொண்டு நாம் தீர்ப்பு வழங்குகின் றோமோ அப்போது அவனுக்கு இணைகற்பித்தவர்களாக வும் ஆகிவிடுகின்றோம். அல்லாஹ்வுக்கு இணை கற்பிப் பதைப்பற்றி அல்லாஹ் கூறும்போது பின்வருமாறு கூறுகின் றான். மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்க வில் லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணையாளர்கள் அவர்களுக்கு இருக்கின்றார்களா? (42.21).

இத்திருவசனத்தினடிப்படையில் அவ்விழாக்களும், கொண் டாட்டங்களும், ஒன்றுகூடல்களும் அவை ஒன்றோ சிறிய இணைக்கு, அல்லது பெரிய இணைக்கு நம்மை இட்டுச் செல்வதற்கு துணை போகின்றன என்பது தெளிவாகின்றது. மேலும் நாம் அவர்களுடன் இணைந்து அவ்விழாக்களை கொண்டாடிக் கொண்டிருக்கையில் அல்லாஹ் அல்லாதவை களை வணங்க நேரிட்டால் நமது தவ்ஹீதை அழிக்கக்கூடிய பெரிய இணையைச் செய்தவர்களாவும், அதிலும் குறைந்த தரத்திலுள்ளவைகளைச் செய்ய நேரிட்டால் நமது தவ்ஹீதின் பூரணத்துவத்தை அழிக்கக்கூடிய சிறிய இணையைச் செய்த வர்களாகவும் ஆகிவிடுகின்றோம்.

நாம் அந்நிய மதத்தினருடன் இணைந்து அவர்கள் கொண்டாடும் விழாக்களை கொண்டாடுவது பெரும் பாவத் திலுள்ளதாக இருப்பதுடன், நமது தூயமார்க்கத்தை மாசுபடுத்தி அதிலே மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றோம். நாம் விழாவில் கலந்து பங்கேற்றுக் கொண்டிருக்கையில் நம்மை மார்க்கத்தை விட்டே நீக்கக்கூடிய ஒன்றை செய்தால் நாம் இஸ்லாத்தை விட்டே வெளியேறி விடுகின்றோம். அவ்வாறில்லாமல் நம்மை மார்க்கத்திலிருந்து வெளியேற்றாத ஒன்றை செய்தால் மரணிப் பதற்குமுன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேட வேண்டும். இல்லாவிடில் கடும் தண்டனைக்கு ஆளாக்கப்படுவோம்.

மேற்கூறப்பட்ட விழாக்களைக் கொண்டாடும் அனைவரும் அவர்களது இஸ்லாமியக் கொள்கைகள் ஆட்டம் காண்பதை புரிந்து கொள்வார்கள். இல்லை நாம் அவர்களது விழாக்களில் கலந்து கொண்டாலும் நமது கொள்கையில் மாற்றம் ஏற்படா வாறு நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம் எனக்கூறிக்கொண்டு சிலர் அவ்விழாக்களில் கலந்து கொண்டாலும் அவர்களது கலாச்சாரங்களும், கொள்கைகளும் நம்மை மாற்றிவிடாது என நம்மால் ஒருபோதும் கூறமுடியாது. ஏனெனில் இஸ்லாம் ஒவ்வொன்றையும் தரம்பிரித்து இதற்குரிய சட்டம் இதுதானென அவைகளது தரத்துக்கேற்பவே வகைப்படுத்தியிருக்கின்றது.

அதனடிப்படையில்தான் மார்க்கம் அனுமதித்தவைகளாக இருந்தாலும், அனுமதிக்காதவைகளாக இருந்தாலும் நம் செயல்கள் எதனைச் செய்வதற்கு துணைபோகின்றதோ அவைகளுக்கும் அந்த அடிப்படைக்குரிய சட்டமே வழங்கப்படுகின்றது. ஆக பெரிய இணையின்பால் இட்டுச் செல்லக்கூடியவைகளுக்கு பெரிய இணையென்றும், சிறிய இணையின்பால் இட்டுச்செல்லக் கூடியவைகளுக்கு சிறிய இணையென்றும் இஸ்லாம் தீர்ப்புக் கொண்டிருக்கின்றது.

**இறுதியாக.**

இச்சிற்றேட்டில் கூறப்பட்ட சில வணக்கங்களையும், இன்று சிலர் இஸ்லாம் என்ற பெயரில் செய்துவரும் மார்க்கத்தில் இல்லாதவைகளையும், அவைகளுக்கு துணை போகக் கூடியவைகளையும், அவைகளுக்கு இஸ்லாம் என்ன சட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதனையும் தெளிவாக அறிந்து கொண்டோம். எனவே அவைகளில் ஈடுபடாதவாறு நம்மையும், நமது மனைவி, குழந்தைகள், உற்றார், உறவினர்களையும் பாதுகாத்து மேற்கூறப்பட்டவைகளை, அல்லது அவைகளில் சிலதை அவர்கள் செய்து கொண்டிருந்தால், அவைகள் இஸ்லாத்திலுள்ளதல்ல. மாற்றமாக இஸ்லாம் என்ற பெயரில் செய்து வரும் பித்அத்துக்கள், இறைநிராகரிப்புக்கள் என அவர்களுக்

குத் தெளிவுபடுத்தி அவைகளை அவர்கள் தவிர்ந்து கொள்ள உதவியாய் இருக்க வேண்டும்.

இறைவா நாம் தெரிந்தும், தெரியாமலும் உனக்கு செய்ய வேண்டிய பல வணக்கங்களை உண்மை நிலையறியாது உன்னால் படைக்கப்பட்ட சாதாரண மனிதர்களுக்குச் செய்து வந்திருக்கின்றோம். இப்போதுதான் அவைகளது விபரீத்தை அறிந்து நாளை மறுமையில் நீ எவ்வாறு நம்மை தண்டிப்பாயோ என அஞ்சிக் கொண்டிருக்கின்றோம். எனவே நாம் செய்து வந்த அந்த இணைகளையும், சிறிய, பெரிய பாவங்களையும் மன்னித்தருள்வாயாக! மேலும் உனது மார்க்கமான இஸ்லாத்தை நீ எந்த அடிப்படையில் இறக்கி வைத்தாயோ அதனடிப்படையில் அதன் தூயதன்மை கெடாதவாறு நாம் பாதுகாத்து வரவும், அதனது தூயவடிவிலே அதனைப் பின்பற்றி நடக்கவும் நமக்கு அருள் புரிவாயாக! மேலும் நாளை மறுமையில் நம்மையும், நமது பெற்றோரையும் நல்லடியார்களின் கூட்டத்தில் சேர்த்து அவர்களுக்கென நீ தயார்படுத்தி வைத்திருக்கும் பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவனத்தில் குடியிருத்துவாயாக!

وصلى الله تعالى وسلم على نبينا محمد وآله وصحبه وسلم.

– – அர்அர் – –

# وسائل الشرك

## باللغة التاميلية


تأليف

د. إبراهيم محمد البريكان

ترجمة

محمد أنيس صلاح الدين

مراجعة

عبد العزيز شاجهان